www.padippakam.com

2-8

மீனம் (மார்ச்சு 1998)

விலை : உரு. 5.00

# உழைக்கும் மக்கள் தமிழகம்



# எரிகிற கோவை...



# கற்றுக்கொடுக்கட்டும்.

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# சாதிக் கொடூரனுக்குத் - தீ!

ஆதிக்கர்கள் தங்களின் ஆளுமையை உறுதி செய்து கொள்ளுகிற நாள்களில் கொட்டமடிப்ப தான விழா அல்ல இது.

நம் அடிமைக் கட்டுகளை அறுத்தெறிகிற நாளே நமக்கு விழா நாள்...

அவ்வடிமைத் தளைகளை அறுத்தெறிய தடையாக இருக்கிற சமூக அழுக்கே சாதி.

அச்சாதியை எரிக்கும் உணர்வை வளர்க்கும் பண்பாட்டு விழாவே-அழுக்கைக் கொளுத்தும் போகித் திருவிழா.

நாம் கொண்டாடும் போகித் திருவிழா, சாதிக். கொடூரன் எரியும் திருவிழா!

என்பதாய் தமிழகச் சிற்றூர்களில் 'ஒடுக்கப் பட்டோரின் உரிமை நெருப்புகள் எரித்து சாதி அரக்கனின் மேனியைச் சுட்டது.

சென்னை, திருவள்ளூர், வடஆர்க்காடு, வேலூர், ஈரோடு, செங்கை, தூத்துக்குடி மாவட்டங்களின் பல பகுதிகளில் எழுச்சியாய்ச் சாதி அரக்கனுக்குத் தீ மூட்டப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்றல்லது ஐந்து சிற்றூர் என்கிற வகையில் தேர்வு செய்யப் பெற்றது. அந்தப் பகுதி மக்களிடம் விரிவாக இதுதொடர்பான கருத்துப்பரப்பல் செய்யப் பெற்று, பகுதி மக்களே பெரும் ஆர்வத்தோடு இதில் கலந்து கொண்டு சாதிக் கொடூரனுக்குத் தீ வைத்துக் கொளுத்தினர்.

தமிழகம் முழுக்கச் சாதிக் கொடூரனைத் தீய்கிற நெருப்புக்கு எரிதழல்களாய்ப் பலபகுதிகளில் கசடுகள் எரிக்கும் போகித் திருநாள்-சிறப்புற நடந்தது.

---

**சென்னையில்...**

**முற்போக்கு நூல்கள், இதழ்கள் கிடைக்குமிடங்கள்.**

*** நாழில் பதிப்பகம்**
183. வெங்கட்டரங்கம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

*** பஃறுளி பதிப்பகம்**
70, வேளச்சேரி நெடுஞ்சாலை
சீனிவாசா வளாகம், மேடவாக்கம்,
சென்னை - 601 302.

---

## சென்னை - 'சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி' கருத்தரங்கில்...

கடந்த 10-01-98 அன்று சென்னை-அண்ணா கலையரங்கத்தில், விடுதலைச் சிறுத்தைகள், தியாகி இம்மானுவேல் பேரவை, தமிழக மனித உரிமைக் கழகம், ஆதித்தமிழர் விடுதலை இயக்கம், அம்பேத்கர் பேரவை ஆகிய இயக்கங்கள் இணைந்த "சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி" சார்பில் "இருபதாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் தாழ்த்தப்பட்டோர் எழுச்சியும் தமிழ்த்தேசிய அரசியலும்" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கத்தில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பாக "தாழ்த்தப்பட்டோர் தலைமை" என்னும் தலைப்பில் கட்டுரை படிக்கப்பட்டது.

கருத்தரங்கில் இரவிக்குமார்-பேசுகையில் ம.க.இ.க. வினரையும் புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சியினரையும் மிகவும் தரக்குறைவாகப்பேசியுள்ளார். அனைவரும் அழைக்கப்பட்டு ஒருசேர நிற்கும் மேடையில் அவ்வாறு பேசுவது பண்பற்றது. திறனாய்வு இருந்தால் அது திருத்தப்படுகிற நோக்கத்தோடு வைக்கப்பட வேண்டுமேயல்லாமல் மேடைக் கவர்ச்சிக்காக இப்படிப் பேசுவது தவறு. இப்படியாகப் பேசுகிற அவர் ஆண்டை அரசை இந்த அளவு கடுமையாகப் பேசிட வில்லை.

இவ்வாறு இரவிக்குமார் பேசியதைக் கூட்டத்தை ஒருங்கிணைத்த தலைவர்கள் ஒழுங்குபடுத்தவும் தவறி இருக்கின்றனர்.

ஆனால் இதைச் செய்தியாக்கிய 'புதிய ஜனநாயகம்' இதழ் புரட்சிகர நேர்மையோடும் செய்தியாக வெளியிடவில்லை.

த.ஒ.வி.இ. சார்பாக படிக்கப்பட்ட கட்டுரையில் சில திறனாய்வுகள் ம.க.இ.க. மீதும் சுட்டப்பட்டது. ஆனால் புதிய ஜனநாயகம்-அதையும் 'அவதூறு' என்கிற தலைப்பில் அடக்கிவிட்டு நழுவுவது நேர்மையில்லை.

www.padippakam.com

உழைக்கும்
மக்கள்
தமிழகம்
20
தொடர்புக்கு : 183. வெங்கட்டரங்கம் தெரு,
சென்னை – 600 005.

# எரிகிற கோவை கற்றுக் கொடுக்கட்டும்!

எரிந்து கொண்டிருக்கிறது கோவை !

கொங்குத் தமிழில் அன்பாய்ப் பேசும் மக்களின் உள்ளங்களில் எங்கிருந்து வந்தது இந்த வெறியுணர்வு? ஏன் இவர்கள் மத வெறிக்கு ஆட்பட்டு அழித்துக் கொள்ளுகிறார்கள்? இவர்களின் எதிரிகளை இவர்களுக்குள்ளாகவே யாரோ காட்டியதை நம்பிக் கொண்டு இவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுகிறார்கள். மதம் பிடித்த யானை செய்கிற அட்டூழியங் களைவிட மத வெறி பிடித்த மனிதன் செய்கிற அட்டூழியங்கள் மிகக் கொடுமையாக இருக் கின்றன.

என்ன காரணத்தால் இவையெல்லாம் நடக்கின்றன என்று பகுத்தறியும் திறன்கூட இல்லாத மனித விலங்குகளாக மாற்றப் பட்டிருக்கின்றனர் கோவை வாழ் மக்கள்.

கோவை வாழ் மக்கள் மட்டுமில்லை - தமிழகம் முழுக்கவே தங்களின் ஆளுமைக்காகவும், அரசியல்பிழைப்புக்காகவும் மிக மலிவான மதவெறியுணர்வை அப்பாவி மக்களிடையே தூண்டிவிட்டுக் கொட்டமடிக்கின்றனர் மதவெறி யர்கள்.

எப்படி இவையெல்லாம் நடக்கிறது. இது ஏதோ திடுமென நடந்துவிடவில்லை. மிகமிக அமைதியாகத் திட்டமிடப்பட்ட செயலாகவே தெரிகிறது.

இந்தியாவில் உள்ள மக்கள் எல்லாம் எப்படி போனால் என்ன? பஞ்சப் பராரிகளாக ஆனால் என்ன - அல்லது எப்படித்தான் அழிந்து போனால் என்ன? - ஆதிக்கர்கள் தங்கள் சுரண்டலுக்கான இந்தியாவைக் காத்திடுவதே நோக்கம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு 'இந்திய ஒற்றுமை(!) யைப் பேசி வருகின்றனர்.

யாருக்கான ஒற்றுமை அது?

சாதிவழி மக்கள் பிளவுபடாமல் அனை வருக்கும் அனைத்தும் பொது என்கிற ஒற்றுமையா?

மதவழி மக்கள் கூறுபடாமல் அனைவரும் சமம் என்கிற ஒற்றுமையா? இல்லை - இல்லை - இந்த ஒற்றுமையைப்பற்றியெல்லாம் அவர்கள் பேசவே இல்லை.

பார்ப்பனன் தவிர எவனும் கோயில் கரு வறைக்குள் நுழையக் கூடாது - சங்கராச்சாரியாக எவனும் வந்து விடக்கூடாது -சாதியைக் கட்டிக் காத்து வல்லரசிய நாடுகளின் சுரண்டலுக்காக இந்தியாவை வாழவைக்கும் பார்பனியம் தவிர வேறு எதுவும் - இந்திய அரசியல் களத்துக்குள் நுழைந்துவிடக் கூடாது - அதை ஏற்றுக் கொள்ளுவதுதான் இந்திய ஒற்றுமை. பாரத மாதாக்கீ ஜெ ! - என்கின்றனர்.

எனவே - அதை நோக்கியே 'அணிவகுப்புக் காக'-இந்தியாவே எரிந்து சாம்பலானாலும் தாழ்வில்லை - 'பாரத தேசம் ' என்று தோள் கொட்டுவோம் ! என்று நெற்றியில் சாந்தை நீட்டிக் கொண்டிருக்கிறது மதவெறி...

இந்தித் திணிப்பு, சமஸ்கிருத மந்திரம், பாரதப் பண்பாடு, பாரதக்கலை போன்ற இந்திய ஒற்றுமைக்கான ஆயுதங்களெல்லாம் துருப் பிடித்துப் போன பின் இந்தியப் பார்ப்பனியம் எடுத்திருக்கிற பழைய ஆயுதத்தின் புதிய மெருகுதான் 'இந்த' மதவெறியாட்டம்.

கடந்த காலங்களில் ஆர்.எஸ்.எஸ் நேரடியாகத் தானே செய்த இந்த தந்திரம், இப்போது சூழ்ச்சியாக தான் ஆடாவிட்டாலும் தன் தசைகளைக் கொண்டு ஆடவைக்கிறது.

காந்தியைக் 'கோட்சே' எனும் ஆர்.எஸ்.எஸ் பார்ப்பான் எப்படி 'இஸ்மாயில்' என்று பச்சைக் குத்திக் கொண்டும். 'சுன்னத்' செய்து கொண்டும் தன் பூநூலை உடலளவில் உருவிப் போட்டுவிட்டு - பார்ப்பன மதவெறிச்சூழ்ச்சியால் கலவரம் ஏற்படுத்த நினைத்தானோ- அதே தன்மைதான் இப்போது புதிய வடிவத்தில் நடந்திருக்கிறது - நடத்தப்படுகிறது.

கிணறுகளிலும் - ஆறு குளங்களிலும் போடப்பட்டுக் கொண்டிருந்த சின்னசின்ன

படிப்பகம்

www.padippakam.com

பிள்ளையார் சிலைகளை இருபது அடி, முப்பது அடி என்று பெரிய அளவில் செய்து - இசுலாமியத் தெருக்கள் வழியாகத்தான் கொண்டுபோவோம் என்று கூறி கலவரங்களைப் 'பிள்ளையாருக்குச் சுழி' போட்டுத் தொடங்கியதிலிருந்து - குண்டு வெடிப்புகளோடு இம் மதவெறியாட்டம் இன்று கோவையில் நடந்து கொண்டிருப்பது வரை நாம் விரிவாக இதைப் பார்த்தாலே போதும்.

92-ஆம் ஆண்டு சென்னை - திருவல்லிக் கேணியில் நடந்த கலவரத்தில் போடப்பட்ட முழக்கங்கள்-திட்டமிட்ட கலவரத்தைத் தூண்டு வதற்கான முழக்கங்களாகவே இருந்தன - என்று அன்றைய உண்மையறியும் குழுக்களின் அறிக்கைகள் வெளிச்சமாய்க் காட்டின.

"நாலும் நாலும் எட்டு துலுக்கனைக் கண்டால் வெட்டு;
நாலும் நாலும் எட்டு – துலுக்கச்சிய கண்டா வெட்டு."
'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்
பிராமணனே சூப்பர் ஸ்டார்'

- என்பதற்கான முழக்கங்களும் - மசூதிகளில் கல்லெறிந்து வீணாக மோதலை உருவாக்கியதும் யாரும் எளிதில் மறந்துவிடாத செய்திகள்

***'திசம்பர் ஆறு, இராமர் ஆலயம் பாரு'*** - என்று தொடங்கி-பாபர் மசூதியை இலட்சக் கணக்கான மக்களை அழைத்துக் கொண்டு ஒரே நேரத்தில் இடித்துத் தள்ளியதெல்லாம் வன்முறை அல்லாத செயல்கள் என்றால் எப்படி ஏற்பது?

வன்முறையைச் செய்பவனைவிட, செய்யத் தூண்டுபவனுக்குத் தண்டனை அதிகம் என்று சட்டம் சொல்லுகிறபோது-தூண்டிய இயக்கங்கள் இந்தப்பூனைகள் பால் குடிக்குமா என்பது போலல்லவா இருக்கின்றன.

*'இந்துக்கள் கடைகளிலேயே பொருள் வாங்குங்கள், முசுலீம் கடைகளில் பொருள் வாங்காதீர்கள்'* - என்பது தான் மக்கள் பற்றா? மக்கள் ஒற்றுமையா?

'முகமதியர்கள், அம்பேத்கர் இயக்கத்தார், புத்த மதத்தவர் ஆகியோருக்கு எதிரான கலவரங்களைத் தூண்டுவதை வேகப்படுத்த வேண்டும். நம்முடைய உறுப்பினர்கள் வாழுமிடங்களிலிருந்து தொலை வாகவுள்ள இடங்களில், புதிய உள்ளூர்க் குண்டர் களைக் கொண்டு, அத்தகைய கலவரங்களைத் தூண்ட வேண்டும். இந்து எதிர்ப்பாளர்களைத் தாக்குமாறு காவல் துறையினரையும் ஆயுதப் படையினரையும் தூண்டிவிடவேண்டும்.' (ஆர்.எஸ்.எஸ். சுற்றறிக்கை *411, RO 3003.11, RSS 003*

(விடுதலை - ஞாயிறுமலர் *26-03-95*)

- என்றெல்லாம் திட்டமிட்டுச் செயல்பட்டுத் தூண்டிவிட்ட மதவெறியுணர்வுகள் வன்முறை யான நோக்கம் கொண்டவை இல்லையா.

இந்துமதத்தின் சாதி வழி இழிவுகளைத் தாங்க இயலாமலும், வாழ்க்கைத் தேவைக்காகவும் மதம் மாறிய இன்றைய இசுலாமிய மதத்தினர் தமிழக ஒடுக்கப்பட்டவர்களாக இந்த ஆண்டைகளின் மீது எப்படிச் சினம் வராமல் இருக்க முடியும்.

இந்தச் சினத்தைக் கிளறிவிடுவதும், இசுலாமி யர்களை நாடுகடத்துவோம் என்பதும், பாக்கிஸ் தானுக்கு ஓடு என்பதும் எந்தவகையில் நியாயம்.

பாரத மொழி என்றும் தேவ பாடை என்றும் சமஸ்கிருதத்தைச் சொல்லுவதும், பாரதக் கலை என்று பார்ப்பனர் கலையைச் சொல்லுவதும், பாரதப் பண்பாடு என்று ஆரியப் பார்ப்பனப் பண்பாட்டைச் சொல்லுவதும், பாரத விளை யாட்டு என்று பத்துப்பதினைந்து பார்ப்பனர்கள் மட்டும் விளையாடும் மட்டைப் பந்தை (கிரிக்கெட்) மட்டும் உயர்த்திப் பிடிப்பதும் - அதில் பதினைந்து பார்ப்பனர்கள் வென்றுவிட்டால் அல்லது தோல்வி அடைந்தால் இந்தியாவே வென்று விட்டது அல்லது தோற்றுவிட்டது என்று வெறிக்கூச்சல் இடுவதும் எப்படி நியாயமானது.

தமிழகத் தாழ்த்தப்பட்டச் சாதியைச் சார்ந்த **இளையராசா** 'மாஸ்ட்ரோ' பட்டம் வாங்கி யதையோ, தமிழக மீனவப்பெண் **அமுதா 'டிரைத்லான்'** போட்டியில் வெற்றி பெற்றதையோ எந்தப் பாரதக் குடுமிகள் பாராட்டின.

அப்படி இருக்கும் போது - கிரிக்கெட்டில் இந்தியா வெல்லுவது முசுலீம்களுக்கு மட்டு மில்லை ஒடுக்கப்பட்டோர் எவருக்குமே பிடிக் காமல் போவதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது.

ஆக, ஆதிக்கர்கள் தங்களின் இந்திய வெறிக் கூச்சலுக்கு, இந்து வெறியாட்டத்துக்கானதாகவே இந்தியாவை மாற்ற எண்ணுகிற போது யார்தான் அவர்களின் 'பாரத'த்தை 'ஹிந்துஸ்தானத்தை' ஏற்றுக் கொள்ள முடியும்.

உலகிலேயே மிக உயரமான 19 இலட்சம் கிலோ எடையுள்ள *முந்திவிநாயகர்* சிலையை வேண்டுமென்றே, கோவை புலிய குளத்தில் கடந்த பதினைந்து நாள்களுக்கு முன்னர் 'பிரதிஷ்டை' செய்வதான ஏற்பாட்டில் கோவையையே அல்லலோ கல்லலோ செய்து முசுலீம்களைக் கிண்டிவிடுவது வன்முறையைத் தூண்டிவிடுவ தில்லையா? சாணக்கியத் தனமில்லையா?

இத்தகைய பார்ப்பன இந்து மத ஆதிக்க வெறித்தனத்துக்கு அடங்கி அடிமைப் பட்டுப்போக



படிப்பகம்

www.padippakam.com

இயலாத சிறுபான்மை மதத்தினர், குறிப்பாக இசுலாத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தன்னெழுச்சியாகவே இதற்கான மாற்றாக குண்டு வைக்கிற வேலைகளில் இறங்கி விடுவது சரியில்லை.

இவர்களின் இச் செயல்கள் எதிரியைத் தீர்மானிக்காததாகவும், உண்மையிலேயே ஆளுமை மதவெறியின் ஆதிக்கத்துக்கு எதிரானதாகவும் இல்லாமல், வெற்றுணர்சியில் கிளர்ந்து வெறியாய் மாறவே செய்கிறது.

குண்டு வைப்பதினால் இச் சிக்கல் தீரப் போவதில்லை. இசுலாமியர்களையே எதிரிகளாகக் காட்டும் இந்துப் பார்ப்பனியம் எந்த அளவு மக்கள் விடுதலைக்கு எதிரானதோ அதே போல் மற்ற மதத்தினரை, குறிப்பாக இந்துமதத்தினரை எதிரியாகப் பார்க்கின்ற இஸ்லாமியரின் போக்கும் இம் மக்கள் விடுதலைக்கு எதிரானதே. மேலும் இத்தகைய போக்கினால் வளர்வது பார்ப்பன இந்துமத வெறித்தனமே யல்லாமல் வேறுஇல்லை.

இந்தியப் பார்ப்பனியம் வல்லரசியச் சுரண்டலுக்கு வழி விட்டுக் கொண்டும், அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டும் எப்படி உறவாடிக் கொண்டிருக்கிறதோ, அதேபோல் இந்தியப் பார்ப்பனியத்தை தாங்கும் இந்துமதமும், வல்லரசு மதமான கிருத்துவத்தை நட்பு மதமாகவே எண்ணிக் கொள்ளுகிறது.

அதை வெளிப்படையாகச் செய்யாமல்-கிருத்துவத்தை எதிர்மைப்படுத்திக் கொள்ளாமல் இயங்குகிறது.

எப்படி அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் இசுலாமிய நாடுகளை எதிரிகளாகக் காட்டுவதோடு இசுலாத் மதத்தையும் பண்பாட்டடிப்படையில் எதிர்மைப்படுத்துகின்றனவோ, அதேபோல வல்லரசிய சார்புள்ள பார்ப்பனிய இந்தியாவும் இசுலாமிய நாடுகளை எதிரிகளாகக் காட்டுவதோடு - இசுலாத் மதத்தையும் பண்பாட்டடிப்படையில் எதிர்மைப்படுத்துகின்றது.

எப்படி சாதியத்தைத் தக்க வைக்க-அது ஒழிந்து விடாமல் இருக்க பார்ப்பனிய இந்தியம் சூழ்ச்சி வலை பின்னுகிறதோ, அதேபோல இந்துப்பார்ப்பனிய மதத்தைத் தக்க வைக்கவும்-அதன்வழி இந்தியாவைக் காக்கவும், பார்ப்பனிய இந்திய அரசு ஒரு நீண்ட காலத் திட்டத்தோடயே இயங்குகின்றது.

இவ்வகை வலைபின்னலைப் புரிந்து கொள்ளாமல் வெறுமனே உணர்ச்சி வயப்படுவது-பார்ப்பனியத்தையும், சாதியத்தையும் வாழவைக்கவே செய்யும்.

பார்ப்பனிய இந்தியத்தையும், வல்லரசிய ஆளுமையையும் எதிர்த்திடாமல் அதன் ஆளுமை படிவங்களான ஆதிக்கச் சாதியத்தையும், மத வெறித்தனத்தையும் தனியே எதிர்த்திட இயலாது.

பார்ப்பனிய இந்தியக் கூட்டமைப்பு விழாமல் இந்த மத ஆளுமை வெறித்தனம் வீழ்ந்து போகாது. எனவே - இங்கு சிறுபான்மை மதத்தைக் குறிப்பாக இசுலாம் மதத்தை தழுவியவர்களுக்கும், தமிழ்த்தேச மக்கள் விடுதலையில் அக்கறை செலுத்துவோர்க்கும் இருபெரும் கடமைகள் உண்டு.

தமிழக இசுலாமிய மதத்தினர் தங்களை மதவழி, முஸ்லீம்களாகக் கருதினாலும், தேசிய இனவழி தமிழ்த் தேசத்தினராகவே, தமிழக மக்களில் ஒருவராகவே கருதிடல் வேண்டும்.

அவ்வகையில் கருதுவதன் வழி-தங்கள் பெயர்களைத் தமிழில் வைத்துக் கொள்வதும், தங்கள் வழிபாடுகளைச் சடங்குகளை தமிழில் செய்வதும் என்கிற வகையில் இம் மண்ணின் மக்கள்தாம் நாங்கள் என அறிவிக்க வேண்டும்.

அதேபோல் தமிழ்த் தேச மக்கள் விடுதலை பற்றிச் சிந்திக்கிறவர்கள் தமிழக இசுலாமியர்களைத் தமிழ்த்தேச மக்களாகவே கருதுவதும்-அவர்கள் மீதான ஒடுக்குமுறைக்கும்-உரிமைகளுக்கும் குரல் கொடுப்பதும் அடிப்படைத் தேவையாகின்றது.

மதவழிப் பண்பாட்டை எண்ணி இசுலாமியரை வேற்று இனத்தினராக உடைக்கும் முயற்சியில் இயங்குகிற ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.கவின் சிந்தனையில் தமிழீழத்தை மாதிரியாகக் கொண்டு கூட நாம் இயங்குவது தமிழக மக்கள் விடுதலைச் சிந்தனைக்கு மட்டுமல்ல-தமிழீழ ஆதரவுக்கும் எதிரானதாகவே அமையும்; பார்ப்பனிய இந்தியத்தை வாழ்விப்பதாகவே முடியும்.

அந்தவகையில் நமக்கு எரிகிற கோவை இதைக் கற்றுக் கொடுக்கட்டும்.

## - மொழிப்போர் ஈகிகள் நாள் - பாளைச் சிறையில் உண்ணா நோன்பு.

இந்தித்திணிப்பை எதிர்த்தும், தமிழ்மொழி காக்கவும் தன்னுயிர் ஈந்த மொழிப்போர் ஈகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியும், பக்தவத்சலம் நினைவு மண்டபம் திறப்பதைக் கண்டித்தும் பாளையங்கோட்டைச் சிறையில் தோழர் தமிழ் முகிலனும், உடன் தோழர்களும் 26-01-98 அன்று உண்ணா நோன்பு இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# புறாவா? ஆந்தையா?

மூக்கைப் பொத்திக் கொண்டு அவர்களிருவரும் சென்னை நேப்பியர் பாலத்தை வடக்கு நோக்கிக் கடந்தார்கள். எப்போதும் எதிர்ப்படும் போர் நினைவுச் சின்னத்தின் முன்னால் புதிதாய் ஒன்று தென்பட்டது.

'என்ன? அது!' என்று அறிந்து கொள்ளும் ஆவலோடு பாரதி மோகனைக் கேட்டான் தவிடன் . ஓ!.... அதுவா! அது தான் இந்திய சுதந்திரப் 'பொன் விழா நினைவுச் சின்னம்.' வா....... பக்கத்தில் சென்று பார்க்க லாம்'என்றான் பாரதி மோகன்.

'பார்த்தாயா தவிடா! வீர சுதந்திரம் வேண்டிநின்றார், வேறொன்று கொள்வரோ தேவி,' எனும் பாரதியின் பாட்டு பலித்தது போல் நமக்குச் சுதந்திரம் வந்து ஐம்பதாண்டுகள் ஆன பொன்விழா நினைவுச் சின் னத்தை.

கைகள் ஏந்தி நிற்கும் உலக உருண்டையில் எடுப்பாய்த் தெரி கிறது பார்! இந்தியாவின் முகம் அதைச் சுற்றிச் சுற்றி வருகிறது பார்! அமைதிப் புறா ஒன்று பார்த்தாயா தவிடா, பாரதத்தின் பெருமைதனைச் சொல்லிக் கொண்டே போன பாரதி மோகனின் நினைவுத் திரையைக் கிழிப்பது போலத் தவிடன் சொன் னான் இல்லையே சுற்றி வருவது ஆந்தை போலத் தெரிகிறதே

என் கோபத்தை கிளறாதே! ஏன் அப்படிச் சொன்னாய்? எனக்குச் சொல்! என்று கத்திய பாரதி மோகனைப் பார்த்து தவிடன் சொன்னான்! நான் சொல்வதைப் பொறுமையாய்க் கேள்-பின் அது ஆந்தையா, புறாவா என்று நீயே சொல் எனக் கூறிவிட்டுத் தொடர்ந்து பகன்றான் தவிடன்.

வெள்ளைக்காரனை விரட்டி யடிப்போம் என்று வீதி வீதியாய் முழங்கி வீர சுதந்திரம் (!) பெற்றபோது இருந்த வெள்ளைக் கார ஆலைகள் ஐநூற்றி ஐம்பது. அதன் பின் முப்பத்தி மூன்று ஆண்டுகள் கழித்து எண்பதில் இருந்த வெள்ளைக்காரர்களின் ஆலைகள் ஆறாயிரத்து ஐநூற்றித் தொன்னூத்தி ஆறு. இது நான் சொல்லும் கணக்கல்ல இந்தப் பாரத சுதந்திரப் பாதுகாவலர்கள் சொன்ன கணக்கு. இந்த வெள்ளைக்கார ஆலைகளின் அளவு இந்தப் பதினேழு ஆண்டு களில் கண்மண் தெரியாமல் வேறு கூடியிருக்கிறது. இந்த உண்மை யின் கண்ணோடு நோக்கடா பாரதி மோகா அந்தநினைவுச் சின்னத்தை.

இது மட்டுமல்ல தொன் னூற்றி ஒன்று முதல் தொன்னூற்றி நான்கு வரை மட்டும் இங்கே வெளிநாட்டுக்காரன் போட்டி ருக்கும் முதலீடு எவ்வளவு தெரியுமா? இருபத்தி எழாயிரத்து நானூற்றி நாற்பது கோடிகள். இந்தக்கணக்கு ஏறிக் கொண்டு தான் இருக்கிறது.

இப்படி வெளிநாட்டுக் காரன் இங்கு வந்து தொழில் தொடங்குவது எதற்காக? முப்பது கோடி தப்பு!தப்பு! தொன்னூறு கோடி முகமுடையாளாகிய பாரதத் தாயைப் பாதுகாக்கவா இல்லையே! இந்த நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்த நாட்டால் இந்தியனான கருணா நிதி ஒரு கணக்குச் சொல்லியிருக் கிறார். அதையும் கேள்.

கூடங்குளம் அணுமின் நிலையம் அமைக்கத் திட்டமிட்ட போது அதன் திட்டச் செலவு இரண்டாயிரம் கோடி, அதற்கு வட்டி ஆயிரத்தி எழுநூறு கோடி இப்போது அதன் திட்ட மதிப்பு பன்னிரண்டாயிரம் கோடி.



பார்த்தாயா! பாரதி மோகா நம் உழைப்பை வெள்ளைக்கார ஆந்தைகள் கொத்தித் தின்னும் கணக்கை.

பிள்ளை தங்கவில்லையே? என்பதற்காக தான் பெற்ற பிள்ளையை அடுத்தவரிடம் கொடுத்து விட்டுப் பின் தவிட்டுக்கு வாங்கி தவிடன் என்று பெயர் வைக்கும் மூடத்தனத் திற்கும், நீங்கள் சுதந்திரம் என்று கத்துகிற மூடத்தனத்திற்கு என்ன வேறுபாடு பாரதி மோகா!

அந்த மூடக் கண்ணாடியை கழற்றிவிட்டுப் பார்த்துச் சொல் லடா பாரதி மோகா உலகத்தைச் சுற்றி வருவது ஆந்தையா? புறாவா!

பாரதி மோகன் ஆந்தையாய் விழித்தான்.

### வெளிநாட்டு முதலீடு

| ஆண்டு | | குழுமங்கள் | | முதலீடு |
|---|---|---|---|---|
| 1991 | – | 950 | – | 530 கோடி |
| 1992 | – | 1520 | – | 3890 கோடி |
| 1993 | – | 1476 | – | 8860 கோடி |
| 1994 | – | 1854 | – | 14190 கோடி |

### வெளிநாட்டுக் குழுமங்கள்

| ஆண்டு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1948–58 | – | 550 |
| 1959–67 | – | 2550 |
| 1968–74 | – | 1574 |
| 1975–80 | – | 1915 |



படிப்பகம்

www.padippakam.com

# வினா? விடை!

**●காஷ்மீரில் இந்துக்கள் கொலை செய்யப்படுவதாக விசுவ இந்து பரிஷத் போராட்டம் நடத்துகிறதே–அவ்வாறு கொல்லப்படுகிறார்களா?**

**– கதிர், சென்னை.**

காஷ்மீர் விடுதலைப் போராட்ட இயக்கங்களால் - அவ்வியக்க எதிரிகள், காட்டிக் கொடுக்கும் துரோகிகள் கொல்லப்படவே செய்கின்றனர். காஷ்மீர் தங்களுக்குத்தான் சொந்தம் என்று இந்தியாவும், பாக்கிஸ்தானும் ஒவ்வொரு பகுதியைப் பிடித்து வைத்துக் கொண்டு ஆளுமை செலுத்துகின்றன. எது 'காஷ்மீர்' என்று இந்திய வரைபடத்தில் இருக்கிறதோ அதுவே பாக்கிசுத்தான் எல்லை வரைபடத்திலும் உள்ளது - மேலும் பாக்கிசுதான் வரைந்த படமே வரைபடங்களில் உள்ளது. அப்படி இருக்க இவ்விரண்டு நாட்டு வரைபடங்களையுமே மறுக்கின்றனர் காஷ்மீர் மக்கள். எனவேதான் ஒட்டு எடுப்பு முறையில் நாங்கள் எங்கிருக்க வேண்டும் என்பதை அறிய தேர்வு நடத்த வலியுறுத்துகின்றனர். அவ்வாறு நடத்துவதாக உறுதி கூறிய நேரு காஷ்மீருக்கென்று தனிச் சலுகை கொடுத்து இந்தியாவுடன் வலிய இணைத்தார்.

ஆனால் - இப் போதைய பாரதீய ஜனதா கட்சி காஷ்மீருக்குள் தனி உரிமைகளையும் நீக்க வேண்டும் என்பதோடு தனிக்காஷ்மீரைக் கடுமையாக ஒடுக்கவும், காட்டிக் கொடுக்கவுமான வேலையைச் செய்து வருகின்றது.

மேலும் இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு காஷ்மீரில் உள்ளவர்கள் பெரும்பாலும் காஷ்மீரத்துப் பார்ப்பனர்களே. விசுவ ஹிந்து பரிஷத் குய்யோ முறையோ என்று கத்துவதெல்லாம் காஷ்மீரத்துப் பார்ப்பானுக்கு அடி விழுகிறபோது மட்டுமே. காஷ்மீரத்தில் ஹிந்துக்கள் படுகொலைக்குக் கத்துகிற விசுவ ஹிந்து பரிசத், பம்பாய் சேரித் தமிழனின் படுகொலைக்குக் குரல் எழுப்புகிறதா? பெங்களூர் அடிமைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வில்லையே.

ஆக, விசுவ ஹிந்து பரிசத் யாரை 'ஹிந்துக்கள்' - என்று அழைக்கிறது என்றும், யாருக்காகக் குரல் கொடுக்கிறது என்றும் நாம் தெளிவடைதல் வேண்டும்.

**●தில்லியில் ஆட்சி மொழியாகத் தமிழைக் கொண்டு வருவதாக தி.மு.க.வும் இப்போது அதி.மு.க.வும் கூறியுள்ளனவே?**

**– சி. தமிழ்ச்செல்வன், அரக்கோணம்.**

கூரையேறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானமேறி வல்லூரைப் பிடிக்கப் போகிறானாம் - என்பது போலுள்ளது இது. தமிழக அரசுக்குள் - தமிழ் ஆட்சி மொழி என்று பேச்சளவில் உள்ளதே அல்லாமல் நடைமுறையில் இல்லை. மாநகராட்சி, நகராட்சி - சிற்றூர்ப்புற ஓட்டை, ஒழுகல் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகள் தமிழில் படிப்பதல்லாமல் - மற்ற எல்லா இடங்களிலும் புற்றீசல்களாய் நர்சரி பள்ளி வழி ஆங்கிலக் கல்வி தான். தமிழில் படித்தோர்க்கு வேலை வாய்ப்பில்லை, தொழிற்கல்வி, மருத்துவக்கல்வி, அறிவியல் கல்வி போன்ற எதுவும் தமிழில் இல்லை. விளம்பரப்பலகைகளில் பொருள்களில், ஊர்தி எண் பலகைகளில் இப்படி எதையெடுத்தாலும் ஆங்கிலம். வீட்டுப் புழக்கத்திற்கான மொழியாக மட்டும் தமிழ் ஆக்கப்பட்டுள்ளது. இவ்வகைப் பெரும் அவல நிலைகளைத் தமிழகத்தில் வைத்துக் கொண்டு இவர்கள் இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தமிழைக் கொண்டு வரப் போகிறோம் என்பது ஏமாற்றுத்தனமானதும் அயோக்கியத்தனமாக ஏய்ப்பதுமே ஆகும்.

மேலும், தமிழக மக்களைச் சரிகட்டுவதற்காகவோ, வாக்கு பெறுவதற்காகவோ, 'தில்லி ஆட்சி மொழியாகத் தமிழும் உள்ளது' என்று ஓர் அறிவிப்பைச் செய்வது என்பது இந்திய அரசுக்குக் கடினமானது அல்ல. அறிவிக்கப்படுவது நடைமுறைப் படுத்தப்படவா போகிறது.

**● முற்போக்கு அரசியலைப் பேசிவந்த பா.ம.க., ம.தி.மு.க. போன்றவை பார்ப்பன பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்தது பற்றி...?**

**– ஜீவா, பாராஞ்சி**

ம.தி.மு.க. தொடங்கப்பட்டபொழுதே, அது இன்னொரு தி.மு.க.வாகத்தான் அதனை வெளிக்காட்டியது. எனவே தி.மு.க. விடமிருக்கிற அனைத்து வகைச் சந்தர்ப்பப் போக்குகளையும் நடைமுறைகளையும் ம.தி.மு.க.வும் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

பா.ம.க.வைப் பொறுத்த அளவு இட ஒதுக்கீடு, பார்ப்பனிய எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு என்றெல்லாம் முழங்கினாலும் அதன் தொடக்கக்கால நடைமுறையிலிருந்து பல்வேறு வகையில் சந்தர்ப்பமாகவே நடந்து கொண்டது. தாங்கள் ஏற்றுக் கொண்டதாக அறிவித்த இந்துத்துவ எதிர்ப்பையே கைகழுவி விட்டு வெளிப்படையாக இந்து மதவியல் - பார்ப்பனியக் கருத்தியலைக் கொண்ட பாரதீய சனதாவுடன் அது கூட்டமைத்துக் கொண்டுள்ளது.

இக் கூட்டணியால் அதன் வழி வெற்றியால் இக்கட்சிகள் தங்களை வளர்த்துக் கொள்வது என்று திட்டமிடுவதாக அறிவிக்கின்றது. ஆனால் உண்மையில் வளரப் போவது பாமக. இல்லை இந்துத்துவமும், பார்ப்பனிய ஆளுமையையே தம் நோக்கமாக கொண்ட பா.ஜ.க.வும், அதன் இணை அமைப்புகளுமே வளரப் போகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# அன்புத் தோழனுக்கு,

ராஜீவ் கொலை வழக்கின் தீர்ப்பு வருவதற்கு முன்பு வரை இன்னொரு செய்தி குறித்து உனக்கொரு மடல் எழுத வேண்டும் என எண்ணியிருந்தேன். ஆனால் ராஜீவ் கொலை வழக்கின் தீர்ப்பு அறிந்து ஏற்பட்ட நெகிழ்வால் இம்மடலை உனக்கு எழுத வேண்டிய கடமை ஏற்பட்டுவிட்டது.

அவ் வழக்கின் தீர்ப்பு என்னை உள அளவில் நெருட்டியது பற்றி நான் எழுதவேண்டிய தேவையில்லை. உனக்கும் அதே வகையில் வருத்தம் இருக்கும் என நான் அறிவேன். எனவே உணர்வு வழிப்பட்டு நாம் வருந்திக் கொண்டிருக்கக் கூடிய செய்தி மட்டுமல்ல அது.

மாறாக இனியேனும் சிலவற்றில் நம்மில் பல இயக்கங்கள் தெளிவாக வேண்டிய கட்டாயத்தை அத் தீர்ப்பு நமக்கு உணர்த்தியிருப்பதாக நான் உணர்கிறேன்.

தோழனே, சட்ட வழிப்பட்டு அத் தீர்ப்புக்குள் நாம் நுழைந்து வழக்கறிஞர்கள் இதைச் செய்தார்கள், இதைச் செய்யவில்லை. இதை இப்படிச் சொல்லியிருக்கலாம், இதை அப்படிச் சொல்லியிருக்கலாம் என்று எடையிட்டுக் கொண்டிருக்கிற வேலை நமக்கில்லை.

நமக்கு அவ்வேலை இல்லை என்பது, கூடாது - என்பதற்காக என்று நீ பொருள் கொண்டிடாதே. அதையும் நாம் செய்யத்தான் வேண்டும். அப்படிச் செய்வதன் வழி வழக்கறிஞருக்கு வழக்குக்கு நாம் துணை நிற்கலாம் தான்.

ஆனால், அதைவிடப் பெருங்கடமை நமக்கு ஒன்று உண்டு எனில் அதை அரசியலாய்ப் புரிந்து கொள்வதும் அதன் அடிப்படையில் செயலாற்றுவது என்பதும்தான்.

தோழனே - நடந்து முடிந்த ராஜீவ் வழக்கின் தீர்ப்பு என்பது ஏதோ சட்டத்திற்குட்பட்டு வழக்கறிஞர்களின் வழக்குரைகளையெல்லாம் தீர ஆய்ந்து, அதன் அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டதாக நீயும் எண்ணியிருக்கமாட்டாய்.

இந்திய அரசக் கட்டமைப்பு இதற்கான தீர்ப்பை அரசியல் வழிப்பட்டு எப்படி அமைக்கலாம் என்பதை உளவுத் துறைகளின் துணையோடு ஆய்ந்தே இவ்வழக்குமன்ற நடுவர் வழியாக அறிவித்திருப்பதாக நாம் உணர முடிகிறது.

இக் கடுந்தீர்ப்பின் வழி தமிழீழக் கருத்துக்கான ஆதரவைத் தமிழகத்தில் பெருமளவில் சுருக்கிவிடவோ அல்லது அடக்கிவிடவோ முடியும் என்றே அவர்கள் கருதியிருப்பதாகத் தெரிகிறது.

இந்திய ஆட்சியரின் திட்டமிட்ட தொடர்ந்த அரசியல் சூழ்ச்சியால் தமிழகத்திற்கான ஆதரவு தமிழகத்தில் எந்த அளவில் சுருக்கப்பட்டுவிட்டது என்பதை உன்னால் அறியமுடியாமல் போகாது. இதைப்பற்றி எண்ணுகிறபோது ஓர் அடிப்படையான உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவ் உண்மையை உணர்ந்து கொள்ள தொடக்கத்திலிருந்தே சில செய்திகளை நாம் நினைப்பது தேவையாகின்றது.

தோழனே - உனக்கு நினைவிருக்கிறதா?

1970-ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 80-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் தமிழகத்தில் தமிழீழத்திற்கான ஆதரவு என்பது எந்த அளவில் இருந்தது என்பது.

அன்றைக்குத் தமிழீழத்தை ஆதரிக்காதவர்களே இருக்க முடியாது. காங்கிரசு கட்சிக்காரர்கள்கூட தவிர்க்க முடியாமல் தமிழீழம் பற்றிப் பேச வேண்டிய கட்டாயத்திற்கு ஆக்கப்பட்டனர்.

ஆனால், அச்சூழலின் பின்னணியை நாம் ஆய்ந்து பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

எந்த அடிப்படையில் தமிழீழத்திற்கான ஆதரவு அன்றைக்கு இருந்தது என்பதே அது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வல்லரசியத்திற்கு எதிராகவும், பார்ப்பனிய இந்தியத்திற்கு எதிராகவும் கட்டி எழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய வளர்ச்சி எப்படி முளையாய், செடியாய், மரமாய் வளரத் தொடங்கியது என்பதை நாம் அறிவோம்.



படிப்பகம்

www.padippakam.com

அறுபத்தைந்தாம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போரின் வழியான தமிழ்த் தேசிய எழுச்சியையெல்லாம் எருவாக்கி வளர்ந்திருந்த தி.மு.கழகம் தவிர்க்க இயலாமல் தமிழ்த் தேசியம் பற்றி இடையிடையே பேசி வந்ததையும், திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் தம் இறுதி நாள்களில் மிகுதியாகத் தமிழ்நாடு பற்றி முழங்கி வந்ததையும், தென்மொழி வழி பாவலரேறு ஐயா தமிழக விடுதலைக்காகத் தொடர்ந்து கருத்துப் பரப்பி வந்ததையும் நாம் அறிவோம்.

அப்பப்பா அன்றைக்கிருந்த தமிழ் அமைப்புகள் தாம் எத்தனை எத்தனை. தமிழ்ப்பற்றாளர் தம் முனைப்பெல்லாம் தமிழ்த்தேசிய உயிர்ப்புக்கான ஏதோ ஒரு காரணியைப் பற்றிக் கொண்டு வளர்ந்ததல்லவா.

ஒன்று மொழியைப்பற்றியோ அல்லது கலை இலக்கியம் குறித்தோ, பண்பாடு குறித்தோ அந்தத் தமிழ்த் தேசிய ஈடுபாடு பெருமளவில் வளர்ந்திருந்தன. ஏன் பொதுவுடைமைக் கட்சியினர் கூட இது குறித்து அக்கறை செலுத்தினார்களே. தீவிரப் பொதுவுடைமைக் கட்சிகளிலிருந்ததெல்லாம் தமிழ்த் தேசியம் நோக்கிப் பிளவுகள் நேரத் தொடங்கின.

ஆனால், அப்படியாக எழுந்த தமிழ்த் தேசியக் கருத்து என்பது இயக்கவழி அல்லாமல் போனாலும் - கருத்து வழிப் பற்றிப் படர்ந்திருந்தது.

இந்தச் சூழலில் எழுந்த தமிழீழ, விடுதலைப் போராட்டத்திற்கு-தமிழகத்தில் வளர்ந்திருந்த தமிழ்த்தேசியக் கருத்தியல் நல்ல களனாகவே இருந்ததல்லவா.

எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவு செழித்து வளரத் தொடங்கியது.

அதைக் கண்டு இந்திய ஆட்சியர் அரண்டு போனதை நாம் உணராமல் இருந்திட இயலாது.

அன்றைய கால வளர்ச்சியில் பல அமைப்பினர் எந்தத் தமிழ்த் தேசிய உணர்வின் வெளிப்பாடுகளிலிருந்து தமிழீழத்திற்கு ஆதரவாய்த் திரண்டனரோ அதன்பின் அந்தத் தமிழ் தேசிய உணர்வையே இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டனர்.

தமிழக உரிமையையே மறந்து - தமிழீழத்திற்கு நாம் ஆதரவாளர்கள் என்பதைக் கூட மறந்து-தமிழீழமே நம் தேசம் என்பதுபோல கூட எண்ணத் தொடங்கிவிட்டனர்.

சில இயக்கங்கள் - நமக்கென்ன தமிழகத்தில் அடிமைத்தனம் இருக்கிறது? தமிழீழம் தான் விடுதலைக்கான தேவையைக் கொண்டிருக்கிறது என்றன.

சில இயக்கங்கள் - முதலில் தமிழீழத்தைப் பார்ப்போம் ஏனெனில் அதுதான் கருவிப் போராட்டம் வரை வளர்ந்திருக்கிறது, நமக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றன.

மேலும் சில இயக்கங்கள் - தமிழீழம் பெற்றுவிட்டால் அவர்கள் வந்து தமிழகத்தையும் விடுதலை செய்வார்கள். என்பதாகவே பலபடி கருதிச் செயல்படத் தொடங்கின.

ஆக, தமிழக உரிமைகளுக்காக எழுந்த தமிழ்த் தேசிய வித்து - தமிழீழத்தை நோக்கியதாய் மாறியது.

மீண்டும் தமிழகம் - தமிழ்த்தேசியம்-என்று 90 ஆம் ஆண்டுகளில் சில அமைப்புகள் முழங்கத் தொடங்கின.

ஆனால் அவையெல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்ட மாதிரியைப் பார்த்துச் சட்டைப் போட்டுக் கொண்டனவாகவே அமைந்தன.

தமிழகத்தின் உரிமை விளைச்சல் தேவைக்கு தம் வேரைத் தமிழீழத்தில் பதித்திருந்தன.

தமிழ்த் தேசத்தினர் - தமிழக விடுதலைச் சிந்தனையர்கள், தமிழர் உரிமைக் கோரிக்கையர்கள் ஆகியோர் தமிழகத்திற்குத் துணையானவர்கள் ஆதரவாளர்கள் என்கிற நிலை படிப்படியாக மாறி... இன்றைக்குத் தமிழீழ ஆதரவாளர்கள் தாம் தமிழ்த் தேசம் குறித்தும் சிந்திக்கிறார்கள் என்பதாகிவிட்டது.

இதை நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது பார்ப்பனிய இந்திய அரசு.

தமிழீழத்திற்கான ஆதரவு என்பதை அரசியல் அளவில் சிதைப்பதும், அடக்குமுறை வழி ஒடுக்குவதும் என்கிற நடவடிக்கையை மேற்கொண்டது.

இதன்வழி ஒரு அடியில் இருமாங்காய் என்கிற அடிப்படையில், அது தமிழீழ ஆதரவுக்கு எதிராகவும், தமிழ்த் தேசச் சிந்தனைக்கு எதிராகவும் திட்டமிட்ட செயல்பாட்டைச் செய்யலானது.


படிப்பகம்

www.padippakam.com

தமிழீழத்திற்காகச் செயற்பட்டு வந்த பல்வேறு தமிழீழ அமைப்புகளில் சிலவற்றை அரவணைத்துக் கெடுத்ததன் வழி அவற்றைத் தமிழீழத்திற்கான துரோக அமைப்பாக இந்திய அரசு மாற்றியது.

ஒருபக்கம் தமிழீழத்திற்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகளை எதிர்க்க சிங்கள் அரசுக்குத் துணை செய்வதும், தம்மால் வளர்க்கப்பட்ட பிற எதிர் அமைப்புகள் வழி நெருக்கடி கொடுப்பதும் என்கிற பணியோடு, தமிழகத்தில் தமிழீழ ஆதரவாளர்களையும் மிகக் கடுமையாக ஒடுக்கத் தொடங்கியது இந்திய அரசு.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்களையும் அதன்வழி தமிழீழத்தை ஆதரிக்கிற போக்குகளையும் கண்டு இந்தியா பெரும் சூழ்ச்சியோடு திட்டமிட்டது.

புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது, புலிகள் இயக்கத்தின் மீது கலங்கம் ஏற்படுத்துவது, புலிகள் இயக்கத்தை அரசியல் வழியும் குற்றப்படுத்துவது, புலிகள் இயக்கத்தை - இயக்கத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து அரசின் பிரச்சாரக் கருவிகள் வழிக் குற்றப்படுத்துவது, புலிகள் ஆதரவாளர்களைக் கடுமையாக ஒடுக்குவது, சுவரொட்டி ஒட்டினாலும், பொதுக் கூட்டம் பேசினாலும் 'தடா' வழி அடக்குவது-போன்ற அரசின் அடக்குமுறைகள் எல்லாம் புலிகள் இயக்கத்தின் ஆதரவையும், தமிழீழத்திற்கான ஆதரவையும் மக்கள் நடுவிலிருந்து பெரிய அளவில் குறைத்து விட்டன.

தமிழகத்தைத் பொறுத்த அளவில் இங்குள்ள உரிமைப் போராட்ட வளர்ச்சிக்கேற்ற தன்மையிலான ஒடுக்கு முறையைக் காட்டிலும், தமிழீழ விடுதலை போரின் அளவுக்கேற்ற ஒடுக்குமுறையைத் தமிழகம் சந்திக்க வேண்டியிருந்தது.

இதுமட்டுமல்லாமல் தமிழகத்தில் நிலவுகிற சாதி மோதல்கள் சிறுபான்மையினச் சிக்கல்கள் இவற்றையும் பெருமளவில் தூண்டிவிடுவதன் வழி தமிழீழ ஆதரவு என்பதைத் திசைதிருப்புகிறது அரசு என்பதையும் நீ அறிவாய்.

எந்த அளவு பெருவாரியான மக்களிடம் தமிழீழ ஆதரவு திசைதிருப்பப்படுகிறதோ, அஞ்சத் தகுந்ததாக ஆக்கப்படுகிறதோ தவறானதாகப் புலப்படுத்தப் படுகிறதோ - அந்த அளவு தமிழக மக்களின் உரிமைப் போராட்டங்களும் ஆக்கப்படுகிறது என்பதை நாம் ஆய்ந்து பார்த்தால் தெரியும்

இங்கு அடிமை மக்களாய் உள்ள நம்முடைய உரிமைக்களுக்கான போராட்டம் இல்லாமல், அண்டை தேச மக்களின் அடிமைத் தனத்துக்கு நாம் கொடுக்கிற ஆதரவு என்பது உறுதி வாய்ந்ததாய் இருந்திட முடியாது என்பதை நீ உணர்ந்திருப்பாய்.

இங்கு தமிழீழம் பற்றிப் பேசத் தகுதியானவர்களாய்த் தங்களை ஆக்கிக் கொண்டவர்கள், தமிழீழ விடுதலைக்கான ஆதரவிலிருந்து அரசியலைப் . பார்க்கத் தொடங்கியதால் அவர்களைக் கடந்து தமிழீழத் ஆதரவு செல்ல இயலவில்லை அவர்களைக் கடந்து இராசிவ் கொலை வழக்கின் தீர்ப்பை எவரும் கண்டிக்க வில்லை.

எனவே, தமிழக மக்களின் உரிமைப் போராட்டங்களிலிருந்து, நம் மீதான அடிமைத் தனங்களிலிருந்து நம் விடுதலைக்குப் போராடுகிற உணர்வை நம் மக்களிடையே வளர்த்தெடுப்பதும் அதன்வழி கட்டமைக்கப்படுகிற தமிழ்த் தேச அரசியலும்தான் தமிழீழ விடுதலைக்கு முழுமையான ஆதரவைத் தர இயலும்.

அத்தகைய சூழ்நிலைகளே எத்தகைய கொடிய அடக்குமுறைகளையும் எதிர்த்து வீழ்த்தும். அப்போதுதான் ராஜீவ் கொலை வழக்கின் தீர்ப்புகள் முறியடிக்கப்படும் என்பதை நீ உணர்தல் வேண்டும்.

இல்லையென்றால், அவ்வழக்கின் தீர்ப்பை சட்டப்படி மேல்முறையீடு செய்வதையும், அதற்கென ஆகிற செலவுக்காகத் தொகை திரட்டுவதையுமே தமிழீழ ஆதரவு என்கிற எல்லை அரசியல் தனக்கான வேலைத்திட்டமாக எடுத்துக் கொள்ளும்.

எனவே தோழனே, இக் கொலை வழக்கின் மீதான இக் கடுந் தண்டனையை எதிர்த்து அரசியல் ஆக்குவதும், சட்டவியல் துறை வழியாகக் காக்கப்படும் பார்ப்பனிய, இந்தியக் கூட்டமைப்பை உடைத்தெறிவது என்பதுமே இன்றைக்கு நம்முன் உள்ள பெருங் கடமையாகும்.

இக் கடமையைச் செய்ய நீயும் முனைப்புடன் இருப்பாய் என எண்ணுகிறேன்.

தோழமையுடன்,

**வேட்பன்.**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க்குடிமகனுக்குத் தண்டனை !

தமிழ்நாட்டில் தமிழ் எப்போதாவது ஆட்சிமொழியாக - கல்வி மொழியாக இருந்ததா? வரலாறு காலந்தொட்டு தமிழ் எப்போதும் தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாய் இருந்ததாகத் தெரியவில்லை. தமிழ் ஆட்சி மொழி யாக இல்லாதபோது தமிழ்க்குடிமகன் எவ்வாறு முன்னேற முடியும்? தமிழ் நாட்டிலிருந்து சுரண்டிச் செல்வோர்தாம் கொழுத்துத் திரிகிறார்கள்.

கழகக் காலத்தில் ஒருவேளை தமிழ் ஆட்சிமொழியாக இருந் திருக்கலாம். பல்லவர் காலத்தி லிருந்து பார்த்தால் சமசுகிருதம், தெலுங்கு, உருது, ஆங்கிலம் என்று பிற மொழிகளே ஆட்சி மொழிகளாக இருந்து வந் துள்ளன. ஆட்சி மொழியாக இருப்பதே கல்வி மொழியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இடைக்காலத்தில் தமிழர் களின் அறிவுத் திறம் அனைத்தும் சமசுகிருதத்திற்குத் தாரை வார்க் கப்பட்டது. இன்று ஆங்கிலத் திற்கு.

இது தமிழ்க் குடிமகனுக்குக் கிடைத்த தண்டனை.

வெள்ளையனை நாட்டை விட்டு அனுப்பி விட்டாலும் அவன் போட்ட முதலுக்கு அவனது மொழியை நாயாய்க் காத்துக் கொண்டிருக் கிறோம்.

தமிழ் 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழி என்று அறிவிக் கப்பட்டது. இன்று வரை அது முழுமையாக நடைமுறைப் படுத்தப் பெறவில்லை.

தாய்மொழியில்தான் கல்வி இருக்கவேண்டும் என்று அறிஞர் கள் பலரும் கூறிவருகின்றனர். மறுப்பார் இல்லை.

ஆனால் தமிழ்நாட்டில் தமிழ் - கல்வி மொழியாக முழுமை யாக எந்த மட்டத்திலும் பயன் படுத்தப்படவில்லை.

மழலைக் கல்வி தரக்கூடவா தமிழுக்குத் தகுதியில்லை?

தமிழ்நாட்டில் எங்குப் பார்த் தாலும் புற்றீசல்கள் போல் ஆங்கில வழி மழலைப் பள்ளிகள்.

பஞ்சைகளுக்கு ஒருவகைப் பள்ளி, பணக்காரர்களுக்கு வேறு வகைப் பள்ளி.

இது தமிழ்க்குடிமகனுக்குத் தண்டனை அல்லவா?

தமிழ்நாட்டில் வாழும் 6 கோடி பேரில் 5 கோடி பேர்க்குத் தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. இருந்தும் தமிழில் படிக்க வழி இல்லை.

தமிழ் பேசும் பெரும் பான்மை மக்களுக்காக ஒரு கூட்டம் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதால்தான் இப்போதிருக்கும் போலியான நிலைமை கூடத் தக்கவைக்கப் பட்டுள்ளது இன்றேல் இதையும் இல்லாமல் செய்திருப்பார்கள் நம் எதிரிகள்.

> தமிழ் ஆட்சி மொழியாக இல்லாதபோது தமிழ்க்குடிமகன் எவ்வாறு முன்னேற முடியும்?

இங்கே வளம் எல்லாம் ஆங்கிலத் துக்கு - வறுமை நம் தமிழுக்கு.

தமிழனின் நீண்ட வரலாற்றில் சொல்லிக் கொள் ளும் படியாக இவர் களிடம் இருக்கும் ஒரே சொத்து தமிழ் மொழிதான். இதை யும் காப்பாற்ற வகை யற்றவர்களாக நாம் இருந்தால் எதிர்காலம் நம்மை மன்னிக் குமா?

தமிழ் வழிக் கல்வி இயக்கம் 1987 ஆண்டு பேராசிரியர் வசுப. மாணிக்கனார் தலைமையில் தொடங்கப்பட்டது. அதற்கு முன்பே தமிழியக்கம், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்பு கள் தமிழ் வழிக் கல்விக்காகக் குரல் கொடுத்து வந்தன.

தமிழ் நாட்டில் பட்டப் படிப்பு வரையில்தான் அரசுக் கல்லூரிகளில் கூடத் தமிழ் மொழியில் கற்க முடியும். கலைப் பாடங்கள் தவிர ஏனைய பாடங்கள் மேல் பட்டப் படிப்பில் இங்கு ஆங்கிலத்தில்தான். கற்பிக்கப்படுகின்றன. உயராய்வு கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான். பட்டயப் படிப்பு - பட்டப் படிப்பு முதலிய தொழில் நுட்பப் படிப்பெல்லாம் ஆங்கிலத் தில்தான்.

இது தமிழ்க்குடிமகனுக்குத் தண்டனை அல்லவா? தமிழுக்குத் தகுதியில்லாமல் போய்விட்டதா? தமிழனுக்குத்தான் தகுதியில் லாமல் போய்விட்டது. ஆட்சி யாளர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

கேட்டபோதெல்லாம் செல் வத்தை வாரிக் கொடுப்பவர்கள் தமிழர்கள் வாக்குகளை வழங்கி ஆட்சிக் கட்டிலுக்கு அனுப்பு கிறவர்கள் தமிழர்கள். ஆட்சி மட்டும் ஆங்கிலத் தில் பொட்டாய் பூச்சியாய் புன்மைத் தேரை யாய்-கிள்ளுக் கீரையாய்த் தமிழர்களை எண்ணும் திமிர் இந்த ஆட்சி யாளர்களுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

பேராயக் கட்சிக்காரனுக்குச் சரி, திமுக. அதிமுக. காரர்களுக்கென்ன? தீயில் மாண்ட செந்தமிழ் மறவர்களைச் சொல்லி வாக்குப் பிச்சை எடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள்தானே இவர்கள்? தமிழுக்காக மாண்ட தமிழர்களைச் சொல்லி ஆட்சிக்கு வருவதும் ஆங்கிலத்தை ஆட்சியிலமர்த்துவதும் ஏன்?

தமிழ்க் குடிமகனுக்குத் தண்டனை தரத்தான். ஏமாளித் தமிழனை எத்தனைக் காலம் ஏமாற்றுவது? இவர்கள் தமிழர்களல்லர் - திராவிடர்கள். இவர்களிடம் நாம் தமிழுணர்வை எதிர்ப்பார்ப்பது மூடத்தனம். இவர்களை நம்ப முடியாது - நம்பக் கூடாது.

குதிரை விட்டையில் முன் விட்டை என்ன? பின் விட்டை என்ன? எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

இவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் தமிழ் இருந்த உரிமையையும் இழந்து வருகிறது. பேராயக் கட்சி ஆட்சியில் பள்ளிப் படிப்பு வரை தமிழ் இருந்தது. ஆறாம் வகுப்பிலிருந்துதான் ஆங்கிலம் மொழியியல் பாடமாகக் கற்பிக்கப் பட்டது. இன்றைக்கு நிலைமை என்ன?

தமிழ்க்குடிமகனுக்கு இது ஒரு தண்டனை!

தமிழ் உரிமையைப் பறித்த இவர்களுக்குத் தமிழர்கள் என்ன தண்டனை தரப் போகிறார்கள்?

இந்தியர்களின் கொள்கை மும்மொழிக் கொள்கை, திராவிடர்களின் கொள்கை இரு மொழிக் கொள்கை, தமிழர்களின் கொள்கை ஒரு மொழிக் கொள்கை ஒரு மொழிக் கொள்கைக்காகக் குரல் கொடுக்கும் நாம். தமிழ்நாட்டுக்குள் இயங்கும் நடுவணரசு, தமிழக அரசு, தனியார் நிறுவனங்கள் அனைத்தும் தமிழில் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதற்காக உருவாக்கப்பட்டதே 'தமிழ் உரிமைக் கூட்டமைப்பு'.

ஒரு மொழிக் கொள்கைக்காகக் குரல் கொடுக்கும் நாம். தமிழ்நாட்டுக்குள் இயங்கும் நடுவணரசு, தமிழக அரசு, தனியார் நிறுவனங்கள் அனைத்தும் தமிழில் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் உரிமைக் கூட்டமைப்பு.

9-04-95 அன்று சென்னையிலும் 13-05-95 அன்று திண்டிவனத்திலும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தித் தமிழ் உரிமைக் கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது.

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழாசிரியர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம், புரட்சிகர இளைஞர் முன்னணி, மக்கள் கல்வி இயக்கம், தமிழியக்கம், தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தமிழக மனித உரிமைக் கழகம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு இளைஞர் பேரவை, முற்போக்கு மாணவர் சங்கம், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகள் பங்கு பெற்றுள்ள த. உ. கூட்டமைப்பு 'தொடர்ந்து ஒரு மொழி'க்கொள்கைக்காகப் போராடி வருகிறது.

தொழில்நுட்பக் கல்வியைத் தமிழில் நடத்த வேண்டுமென்றும் பெயர்ப்பலகைகளைத் தமிழில் வைக்க வேண்டுமென்றும் பல போராட்டங்களைத் தமிழகம் தழுவி நடத்திய கூட்டமைப்பு தமிழ்ப் பயிற்று மொழி ஆட்சி மொழிக் கோரிக்கைகளை வற்புறுத்திக் கையெழுத்தியக்கம் நடத்தித் தமிழக அரசுக்குப் படிவங்களை அனுப்பியது.

தமிழக அரசு 1997 - 98 ஆம் கல்வியாண்டில் தமிழ்வழிப் பொறியியல் பிரிவைத் தொடங்குவதாக அறிவித்து மாணவர்களிடம் விண்ணப்பம் போடச் சொன்னது, தமிழ் வழியில் பொறியியல் வகுப்புகளை நடத்த அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து முன்முயற்சி எடுத்தது.

இந்தியத் தொழில் நுட்பக் கழகம் இசைவு தரவில்லை என்று சொல்லி தமிழக அரசு தமிழ் வழிப் பொறியியல் படிப்பை நிறுத்திவிட்டது. 360 தமிழ் வழிப் பொறியியல் இடங்களுக்கு விண்ணப்பித்திருந்த அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஏமாற்றப்பட்டனர்.

தமிழ் வழியில் படிக்க விரும்பிய மாணவர்களுக்குத் தமிழக அரசு கொடுத்த தண்டனை இது.

இந்த ஆண்டு ஏமாற்றியது போலல்லாமல் வரும் 1998-99 ஆம் கல்வியாண்டில் பொறியியல் கல்வியைத் தமிழில் நடத்துவதுடன் பிற தொழில்நுட்பப் பாடங்களையும் தமிழில் நடத்த வேண்டும்.

இதற்கு முன்வராத தமிழக அரசு தன்னைத் 'தமிழ்நாடு அரசு' என்று அழைத்துக் கொள்வது வெட்கக் கேடானது.

**தமிழ்க்கனல்**
**('தமிழியக்கம்')**

●



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர்

# தோழர் தியாகுவுடன்...

பொதுவாக ஓர் இதழ் என்றால் அதில் ஒரு 'நேருரை'- என்கிறபடி இல்லாமல், ஓர் அடிப்படை நோக்கத்திற்காக இந்த நேர்காணல் பகுதி தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழக மக்களின் உரிமைகளுக்காக இயங்குகிற பல்வேறு அமைப்புகளும் என்ன அரசியல் நோக்கங்கொண்டு இயங்குகின்றன என்றும், அவ்அமைப்புகளின் கொள்கை மீது என்ன என்ன திறனாய்வுகள் மாற்றியக்கங்களால் வைக்கப்படுகின்றன, அவற்றுக்கு அவ்வமைப்பு என்ன விடை கூறுகிறது என்பன குறித்தான ஆய்வு நோக்கிலேயே இந் நேர்காணல் முயற்சி மேற் கொள்ளப் பெறுகிறது.

இதன் வழி அவ் அமைப்புகள் குறித்த சில தவறான கற்பிதங்கள் உடையவும், அரசியல் திறனாய்வு வழிச் சில தெளிவு பிறக்கவும் வழி செய்யும் என்றும், அமைப்புகளிடையே குறுங்குழுப் போக்கு மாறி இணைவுப் போக்குகள் உருவாக இந் நேர்காணல்கள் துணை நிற்கும் என்றும் 'மக்கள் தமிழகம்' நம்புகின்றது.

இந்நேர்காணல் இரு இதழ்களில் தொடரும். முதல் இதழிற்கான கேள்விகள் 'மக்கள் தமிழகம்' ஆசிரியர் குழுவே தொகுத்தது. தொடர்ந்த அடுத்த இதழுக்கான கேள்விகள் வாசகர்களிடமிருந்து பெறப்படுபவற்றைக் கொண்டு அமையும். எனவே வாசகர்கள் தங்கள் வழியான கேள்விகளை "உழைக்கும் மக்கள் தமிழகம்"-183, வெங்கட்டரங்கம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5. எனும் முகவரிக்கு அனுப்பிடக் கேட்டுக் கொள்கிறோம்.

கேள்விகளை மார்ச்சு 20-ஆம் நாளுக்குள் அனுப்பிவிடவும்.

● *தமிழ்த்தேச விடுதலைக்கான அரசியல், செயல்பாட்டையும், தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கான அரசியல், செயல்பாட்டையும் எப்படி இணைக்கிறீர்கள்?*

எப்படிப் பாட்டாளி வர்க்க விடுதலை என்பது சுரண்டல் ஒழிப்பைக் குறிக்குமோ, அதேபோல் தாழ்த்தப்பட்டோர் விடுதலை என்பது சாதி ஒழிப்பையே குறிக்கும். சாதி அமைப்பை அடியோடு ஒழிக்காமல் தாழ்த்தப்பட்டோர் முழுவிடுதலை பெற முடியாது. சாதி அமைப்பென்பது ஒரு பொருண்மிய அமைப்பாக இருக்கிற அளவில் அடித்தளத்துக்குரியதாகவும், அதேபோது ஒரு பண்பாட்டு அமைப்பாக இருக்கிற அளவில் மேற்கட்டுமானத்துக்குரியதாகவும் உள்ளது. அதாவது இரண்டு தளங்களிலும் சாதி நிலை கொண்டுள்ளது. அதை ஒழிக்கிற பணியும் இரண்டு தளங்களிலும் நடை பெற்றாக வேண்டும்.

பொருண்மிய அமைப்பிலும் சரி, பண்பாட்டு அமைப்பிலும் சரி அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அரசியல் புரட்சி இன்றியமையா முன்தேவை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். சதிகாரத்தைத் தகர்த்திடாமலும், தமிழ்த்தேசிய அரசதிகாரத்தை நிறுவிடாமலும் சாதி ஒழிப்புக்குத் தேவையான பொருண்மிய முன்னெடுப்புகளை நிறைவேற்ற முடியாது. அடிப்படையான நிலவுடைமைச் சீர்திருத்தம், அனைத்தளாவிய இட ஒதுக்கீடு முதலானவற்றைச் செயலாக்க அரசதிகாரம் இல்லாமல் முடியாது. சாதி ஒழிப்புக்கான பண்பாட்டு முன்னெடுப்புகளை அனைத்திலும் முதன்மையாக அகமணமுறை ஒழிப்பை, அதாவது சாதி மறுப்புத் திருமணங்களை - அரசதிகாரம் கொண்டே நிறைவேற்றிட இயலாது. என்றாலும், அரசதிகாரத்தின் துணைக்கொண்டு பொருண்மிய அமைப்பில் செய்யப்படும் மாற்றங்கள் பண்பாட்டு மாற்றங்களை எளிதாக்கும், விரைவாக்கும். பொருண்மிய மாற்றங்களைக் கொண்டு மட்டுமே சாதியை ஒழித்து விட முடியாது, ஆனால் சாதிகளுக்கிடையிலான பொருண்மிய ஏற்றத் தாழ்வுகளை ஒழித்துவிட முடியும். ஏற்றத் தாழ்வற்ற அந்த நிலையையே நாங்கள் புரட்சிகர சமூகநீதி என்கிறோம். சமூகநீதியிலிருந்துதான் சாதி ஒழிப்புக்குச் செல்லமுடியும். தீண்டாமை ஒழிப்பு, சமூகநீதி, அகமண முறை முதலான சாதியப் பண்பாட்டு ஒழிப்பு இவற்றைச் சாதி ஒழிப்பின் மூன்று கட்டங்கள் எனலாம். ஒன்றாகத் தொடங்கி ஒன்றன் பின் ஒன்றாக நிறைவுறும் கட்டங்கள் இவை.

தமிழ்த் தேசியத்திற்கும் சமூகநீதிக்குமான இந்த இடையுறவைத்தான் எமது தமிழ்தமிழர் இயக்கத்தின் உயிர் மையமாய்க் கொண்டுள்ளோம். இந்தப் புரிதலின் அடிப்படையில் எமது

படிப்பகம்

www.padippakam.com



**சாதியமைப்புக்கிடையிலேயே ஒரு வர்க்க அமைப்பு வளர்ந்திருப்பதையும், ஒவ்வொரு சாதியிலும் வர்க்கப் பிரிவினை வளர்ந்து வருவதையும், வர்க்கப் போராட்டமென்ற மெய்ந்நடப்பையும் மறுப்பதுதான் தவறு. நீங்கள் சொல்வது போல வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கே சாதி பெருந்தடையாக உள்ளது.**

செயல்பாட்டை அமைத்துக் கொள்ளவே விடாது முயல்கிறோம்.

● *தமிழ்த் தேச வகுப்பு (வர்க்க)ப் போராட்ட எழுச்சியில் சாதி ஒழிப்பு நிறைவேறும் என்று, அப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கே சாதி பெருந்தடையாக இருப்பதை மறந்து அல்லது மறுத்துச் சொல்லப்படுகிறதே, தங்கள் அமைப்பின் கருத்து என்ன?*

வர்க்கமும் சாதியும் ஒன்றல்ல. ஆனால் இரண்டுக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. வர்க்கம் முழுக்க முழுக்க ஒரு பொருண்மியக் கூறு என்றால் சாதியும் ஓரளவிற்கு ஒரு பொருண்மியக் கூறுதான். சாதி என்பது வெறும் பண்பாட்டுக் கூறாக இருக்குமானால் வர்க்கப் போராட்ட எழுச்சியில் சாதி ஒழிப்பு நிறைவேறும் என்று சொல்வதில் கொஞ்சமாவது பொருளிருக்கும். சாதி வெறும் மனநிலையன்று, அது ஒரு வாழ்நிலை என்பதைப் புரிந்துகொண்டாக வேண்டும். வர்க்கப் போராட்டங்மே போதுமென்று இல்லாமல் சாதி ஒழிப்புக்கென்று தனிப்போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். எத்தகைய போராட்டங்கள் என்பதை முதல் வினாவிற்கான விடையிலிருந்து அறியலாம். சாதியமைப்புக்கிடையிலேயே ஒரு வர்க்க அமைப்பு வளர்ந்திருப்பதையும், ஒவ்வொரு சாதியிலும் வர்க்கப் பிரிவினை வளர்ந்து வருவதையும், வர்க்கப் போராட்டமென்ற மெய்ந்நடப்பையும் மறுப்பதுதான் தவறு. நீங்கள் சொல்வது போல வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கே சாதி பெருந்தடையாக உள்ளது.

*தமிழ்த் தேசிய உணர்வுகள் இன்றைக்குத் தமிழீழ ஆதரவை நோக்கியே முதன்மைப்படுத்தப் படுகிறது என்பதை உணருகிறீர்களா? அவ்வாறில்லாமல் தமிழ்த் தேசியத்திற்கான எழுச்சிப் போராட்டம் என்பதே தமிழீழத்திற்கான ஆதரவாக இருக்க முடியும் என்பதை மறுக்கிறீர்களா?*

தமிழ்த் தேசிய **உணர்வுகள்** இன்றையச் சூழலில் தமிழீழ ஆதரவை நோக்கி முதன்மைப் படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது. அதில் எவ்விதத் தவறுமில்லை. தமிழீழத்திலும், தமிழகத்திலுமான நிலைமைகளை ஒப்புநோக்கின் **உணர்வுகள்** இப்படி அமைவதுதான் இயல்பு. ஆனால் இதற்காகத் தமிழ்த் தேசிய சக்திகள் தமிழ் நாட்டை அடியோடு மறந்துவிட்டு, ஈழமே எல்லாம் என்று செயல்பட வேண்டுமென்பதில்லை அப்படி யாரும் செய்வதாகவும் நான் கருதவில்லை. தமிழ்ச் சமூகத்தில் ஊன்றி நின்று தமிழக மக்களுக்காகச் செய்ய வேண்டியதே இங்குள்ள தமிழ்த் தேசியச் **சக்திகளின்** முதன்மைப் பணி என்பதில் ஐயமில்லை.

தமிழ்த் தேசியத்திற்கான எழுச்சிப் போராட்டமே தமிழீழத்திற்கான ஆதரவாக இருக்க முடியும் என்பது முழு உண்மை ஆகாது.

தமிழ்த் தேசியப் போராட்டம், தமிழீழத் தேசியப் போராட்டம் இரண்டும் களத்திலும் காலத்திலும் வேறுபட்டவை. போராட்டத்தின் குறியிலக்குகள், பகையிலக்குகள் என்ற வகையிலும் வேறுபட்டவை. வளர்ச்சியின் படிநிலையிலும் வெகுவாக மாறுபட்டவை. இவ்விரு போராட்டங்களுக்குமான உறவைச் சுட்டுவது வேறு, இரண்டையும் ஒன்றெனக் காட்டுவது வேறு. இவ்விரு போராட்டங்களும் தொடர்புடையவை, ஆனால் தனித்தனியானவை. இவை ஒன்றுக்கொன்று முன்தேவைகள் அல்ல. ஒன்றை ஒன்று அறுதியாகச் சார்ந்திருப்பவை அல்ல.


தமிழ்த் தேசியத்திற்கான எழுச்சிப் போராட்டம் அதனளவிலேயே தமிழீழத்திற்கான ஆதரவாக அமையும் என்பது உண்மைதான். ஆனால் அதுமட்டுமே போதும், தமிழீழத்திற்கான ஆதரவு என்பதாய்த் தனியாக எதுவும் செய்ய வேண்டியது இல்லை என்ற எண்ணம் தவறானது. தமிழ்த் தேசிய எழுச்சிப் போராட்டத்தின் எல்லைக் கட்டுமானத்திற்குள் தமிழீழத்திற்கான ஆதரவு இயக்கம் முடங்கி நிற்க வேண்டியதில்லை.

சற்றே ஒப்பிட்டுச் சொல்வதற்காக வியத்நாம் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியை நடத்தி இருந்தால் வியத்நாம் விடுதலைப் போராட்டத்திற்கு உதவியாகத்தான் இருந்திருக்கும். ஆனால், உடனடியாக அதற்கு எந்த வாய்ப்பும் இல்லாத நிலையில், வியத்நாமில் அமெரிக்க அரசு தலையிடுவதற்கு எதிராக அமெரிக்க மக்கள்



படிப்பகம்

www.padippakam.com



**எமது தமிழ் தமிழர் இயக்கமானது திராவிட இயக்கத்தின் சரியான உள்ளீட்டைக் கையிலெடுத்து அதற்குச் சரியான உருவம் தந்து, தன் குறிக்கோள்களையும் வழிமுறைகளையும் வகுத்துக்கொண்டு செயல்படுகிறது. அதேபோது திராவிட இயக்கம் எனப்படுவதன் இன்றைய பரிணாம வளர்ச்சிகளை ஈவிரக்கமின்றி தோலுரித்துக் காட்டியும் வருகிறது.**

நடத்திய போராட்டம் (வேறு நாடுகளின் மக்கள் நடத்திய போராட்டமும் கூட) வியத்நாம் விடுதலைக்குத் துணை செய்தது அல்லவா?

● *திராவிடம் என்கிற பொய்ம்மையையும் வீழ்த்த வேண்டும் என்பதைத் தங்கள் அமைப்பு ஒப்புக் கொள்ளுகிறதா? ஆம் அல்லது இல்லை எனில், அது தொடர்பான விளக்கத்தையும், அதை உறுதிப்படுத்துகிற வகையிலான செயல்களையும் கூற இயலுமா?*

திராவிடம் என்ற சொல் ஒரு தேசத்தைக் குறிக்க ஆளப்படுமானால் பொய்மைதான். இந்திய தேசம் பொய், திராவிட தேசமும் பொய். தமிழ்த் தேசமே மெய். ஆனால், திராவிடம் என்பது ஒரு கருத்தியலையும், அந்தக் கருத்தியலின் அடிப்படையிலான சமூக-அரசியல் இயக்கத்தையும் குறிக்கும் வகையில் ஆள்ப்படுமானால் பொய்மை அன்று. பார்ப்பன எதிர்ப்பு, சமூகநீதி, வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ்ப் பற்று முதலான வற்றை உள்ளீடுகளாகக் கொண்ட கருத்தியல்தான் திராவிடம் எனப் பெயர்பெற்றது. ஒருவகையில் பார்த்தால் தமிழியம் என்ற சரியான உள்ளீட்டின் உருத்திரிந்த வெளியீடுதான் திராவிடம்.

திராவிட இயக்கம் என்பது சாரத்தில் தமிழ்த் தேசிய சமூக நீதி இயக்கமேயாகும். இதன் முதற்பெருந்தலைவரும், வழிகாட்டியும் தந்தை பெரியாரே. திராவிடம் என்ற கருத்தியலும், திராவிட இயக்கமும் இன்றும் அப்படியேதான் இருக்கின்றனவா என்றால், இல்லைதான். கருணாநிதியும், ஜெயலலிதாவும், கோபால்சாமியும் திராவிட இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள சீரழிவின் அடையாளங்களே ஆவர். குறிக்கோளில் குழப்பமும், வழிமுறையில் தடுமாற்றமும் திராவிட இயக்கத்தைப் பிறழ்வுறச் செய்து, ஈற்றில் அரசியல் சந்தர்ப்பவாதம், லஞ்ச ஊழல், வெற்று ஆரவாரம் என்ற நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளன.

எமது தமிழ் தமிழர் இயக்கமானது திராவிட இயக்கத்தின் சரியான உள்ளீட்டைக் கையிலெடுத்து அதற்குச் சரியான உருவம் தந்து, தன் குறிக்கோள்களையும், வழிமுறைகளையும் வகுத்துக் கொண்டு செயல்படுகிறது. அதேபோது திராவிட இயக்கம் எனப்படுவதன் இன்றைய 'பரிணாம வளர்ச்சிகளை' ஈவிரக்கமின்றித் தோலுரித்துக் காட்டியும் வருகிறது.

● *'தமிழர்கள்'-என்கிற தலைப்பில் வல்லரசிய உறவாளர்களையும், பார்ப்பனிய ஏற்பாளர் களையும் உள்ளடக்கலாமா?*

தமிழர் என்ற சொல் தமிழைத் தாய்மொழி யாகக் கொண்ட அனைவரையும் குறிக்கும். தமிழ்த் தேசிய இனம் என்று சொல்லும்போது தமிழைப் பொது மொழியாகக் கொண்டு, நாம் தமிழர் என்ற உணர்வில் வெளிப்படும் தமிழ்ப் பண்பாட்டுடன், வரையறுக்கப்பட்ட ஒரு நிலப்பரப்பில், பொருண் மியப் பிணைப்புக்கொண்டு வரலாற்று வழியில் நிலைத்து வாழும் ஒரு மக்களினத்தைக் குறிக்கும். நீங்கள் குறிப்பிடும் வல்லரசிய உறவாளர்களையும், பார்ப்பனிய ஏற்பாளர்களையும் தமிழினத்துக்குப் பகையான தமிழர்கள் என்று வகைப்படுத்தலாம். தமிழர்களிலேயே சிலர் தமிழினத்துக்கு எதிராக இருக்க முடியும் தானே?

'அசாமு'க்குள் போடோ, தமிழகத்திற்குள் பல்வேறு குறு தேசியங்களை உருவாக்குவது போல - தேசங்களுக்குள் சிறு தேசியங்களை உருவாக்கு வது, அவற்றை இன்றைய மொழி, இன வழிப்பட்டப் தேசங்களுடன் முரண்படவைப்பது, அதன்வழி பார்ப்பனிய இந்தியாவை உறுதி செய்வது என்கிற பாரதீய ஜனதா கட்சி மற்றும் பார்ப்பனியத்தின் இன்றைய அணுகுமுறை குறித்துத் தங்கள் அமைப்பின் மாற்றுக் கருத்தும், திட்டமும்...

'குறு தேசியங்கள்' அல்லது 'சிறு தேசியங்கள்' என்று நீங்கள் குறிப்பிடுகிறவற்றை யாராலும் செயற்கையாக உண்டுபண்ண முடியாது. ஒரு தேசிய இனத்திற்கு உள்ளேயே குறிப்பிட்ட சில கூறுகளில் தெளிவாக மாறுபட்டு நிற்கிற இனக்குழுக்கள் இருக்க முடியும்; இருக்கவே செய்கின்றன. இந்த இனக் குழுக்களின் இருப்பை ஏற்று அவற்றின் வளர்ச்சிக்குகந்த அரசியல், பொருண்மிய, பண் பாட்டுக் காப்புக் கூறுகளையும், வழி வகைகளையும் கண்டறிந்து செயலாக்க வேண்டும். தமிழ் ஈழத்தில் முஸ்லீம்களின் நிலை இதற்கோர் எடுத்துக்காட்டு.



படிப்பகம்

www.padippakam.com

அசாமில் போடோக்களும் அசாமிய தேசிய இனத்திற்குள் தனித் தன்மை வாய்ந்த ஓர் இனக்குழு ஆவர். வரலாற்றுப் போக்கில் அவர்களே ஒரு தனித் தேசிய இனமாகவும் வளரலாம். அதனால் தீங்கொன்றுமில்லை. போடோக்களின் தனி அடையாளத்தையும், அவர்களின் கோரிக்கை களையும் அசாமிய தேசிய இயக்கங்கள் ஒரு சில வேனும் ஆதரிப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ் ஈழத்தில் முஸ்லீம் அல்லாத தமிழர்களுக்கும், முஸ்லீம் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாட்டைச் சிங்களப் பேரினவாதம் பயன்படுத்திக் கொள்கிற காரணத்தினாலேயே அப்படி ஒரு முரண்பாடு இருப்பதை மறுக்கவோ, மறைக்கவோ தேவையில்லை. அசாமில் போடோக் களின் இருப்பையும், அவர்களின் வளர்ச்சிக்கான கோரிக்கைகளையும் ஏற்று இந்திய வல்லாதிக் கத்திற்கு எதிரான போராட்டத்தில் அவர்களையும் இணைப்பது அசாமிய தேசிய சக்திகளின் கடமையாகும். மேற்கு வங்கத்தில் கூர்க்கா மக்களின் போராட்டத்தையும் இப்படித்தான் பார்க்க வேண்டியுள்ளது. இந்தக் 'குறு தேசிய' போராட்டங் களை பாரதிய ஜனதாக் கட்சியும் ஏனைய பார்ப்பனிய சக்திகளும் பயன்படுத்திக் கொள்ளும் ஆபத்து உண்டுதான். இந்திய தேசியத்திற்கு முட்டுக் கொடுப்பதற்கு இந்தப் போராட்டங்களை அந்தச் சக்திகள் பயன்படுத்திக் கொள்ள முற்படுவதில் வியப்பதற் கொன்றுமில்லை. ஆனால், அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முற்படுவதாலேயே இந்தப் போராட்டங்கள் அடிப்படையற்றவை என்றாகி விடாது.

காஷ்மீர் மக்களின் போராட்டத்தைப் பாகிஸ்தான் பயன்படுத்திக்கொள்வதாலேயே அந்தப் போராட்டம் பாகிஸ்தான் தூண்டுதலால்தான் நடைபெறுகிறது என்று ஆகிவிடாது. 'குர்திய' இனமக்களின் போராட்டத்தை அமெரிக்கப் பேரரசு பயன்படுத்திக் கொள்ள முற்படுவதாலேயே அந்தப் போராட்டம் அமெரிக்காவின் கண்டு பிடிப்பு என்று ஆகி விடாது.

தமிழகத்திலும், இல்லாத 'குறுதேசியங்களை' இட்டுக்கட்டி உருவாக்க எவராலும் முடியாது. புறநிலைத் தேவைகளிலிருந்து அவை எழும்போது புறஞ்சார்ந்த கண்ணோட்டத்தில் அவற்றை அணுகித் தீர்வுகாணும் முதிர்ச்சியைத் தமிழ்த் தேசிய சக்திகள் பெறவேண்டும்.

# பா. ஜ. க. தமிழீழத்தை ஆதரிக்குமா?

சிவசேனா இயக்கம் தமிழீழத்தையும், விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் ஆதரித்ததைப்போல பாரதீய ஜனதா கட்சியும் தமிழீழத்தை ஆதரிக்கும் என்பதான எண்ணம் சிலரிடம் நிலவத் தொடங்கியுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி முன்பு நடத்திய ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டிற்கே அத்வானி அழைக்கப்பட்டதை யொட்டி எண்ணுகிறபோது - பாரதிய ஜனதா கட்சி ஈழத்தமிழர்க்கு ஆதரவாக இருக்கும் போலவும், அதற்காகத்தான் பா.ம.க அதனுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறது என்பது போலான செய்திகளையும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

உண்மை அதுவாக இருக்குமானால், இது மிகப் பெரிய மோசடியாகவே அமையும்.

பா.ஜ.க. ஈழத்தமிழரை 'இந்துக்கள்' என்கிற அடிப்படையில் ஆதரிக்க முன்வருவதன் வழி, தமிழீழத்திலும்-தமிழகத்திலும் முஸ்லீம்களுக்கு எதிரான மதக்கலவரத்தை அதிகப்படுத்தவே திட்டமிடுகிறது: அவ்வகைக் கலவரங்களே இத்தேசிய இன எழுச்சிகளுக்கு இன்னொரு வகையில் தடையை உருவாக்கவும்- அதுவே முதன்மைச் சிக்கலாக மாறவும் செய்யும்.

ஆக-பாரதீய ஜனதா தமிழீழ மக்களைப் பற்றி ஆதரவாகப் பேசுவது என்பது ஈழத்துக்கும், தமிழகத்துக்கும் குழிப்பறிப்பதற்காகத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# வெற்றி கொண்டாடும் சீருடை ரவுடிகள்!!

தமிழகத்தில் ரவுடிகளின் அட்டகாசம் ஒடுக்கப்பட்டுவிட்டது என்கிறார் முதல்வர் கருணாநிதி உண்மை தான்!

சீருடை அணியாத ரவுடிகளின் அட்டகாசங்களைக் கட்டுப்படுத்திவிட்டது இந்தச் சீருடை அணிந்த போலீஸ் ரவுடிக் கும்பல்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது (அல்லது) காய்ச்சத் தூண்டுவது

கூட்டிக் கொடுப்பது (அல்லது) கூட்டிக் கொடுக்கத் தூண்டுவது, 'மாமூல்' கொடுக்காத ரவுடிகளைச் சுட்டுக் கொன்று அவ்வப்போது வீர(?) சாகசங்களை நிகழ்த்துவது, மக்களுக்குள் பகையை மூட்டுவது, இறுதியாக மக்களின் உரிமைக்குப் போராடுபவர்களைச் சட்டத்துக்குப் புறம்பாய் அடைத்து வைப்பது, சித்திரவதை செய்வது, பொய் வழக்குப் போடுவது மற்றும் தேடுதல் அல்லது தற்காப்பு என்ற பெயரில் சுட்டுக் கொல்வது.

இன்னும்.. இது போன்றவையே.. இந்த அங்கீகரிக்கப்பட்ட போலீஸ் ரவுடிகளின் கடமைகள், இந்தச் சீருடையணிந்த ரவுடிகள் எங்கிருந்தாலும் ஒரே மாதிரியே சிந்திப்பவர்கள் என்பதற்குச் சான்றுதான் நெல்லை மாவட்டத்தின் வள்ளியூர் பகுதி அவ்வப்போது தங்களின் ரவுடித்தன ஆளுமையை நிரூபிக்க வீர(?) சாகசங்கள் செய்வது இவர்களின் வாடிக்கை.

தேவாரம் தொடங்கி, சைலேந்திர பாபு, ஜாங்கிட் போன்ற இவர்களின் வரிசையில் நிற்பவர் தான் வள்ளியூர் துணை ஆய்வாளர் மாடசாமி.

வள்ளியூரில் சில மாதங்களுக்கு முன்பு ''வழக்கறிஞரை''த் தாக்கி சாகசம் செய்த இந்தப் ''பச்சை மட்டை மாடசாமி'' (பச்சைமட்டையில் அடித்தவராம்) தன்னுடைய அடுத்த சாகசத்திற்குக் காத்திருந்த போதுதான் பரப்புவிளையைச் சேர்ந்த தாணி (ஆட்டோ) ஓட்டுநர் சுடர்மணி என்பவர் அந்த சிற்றூரில் (குமரி மாவட்டம்) கொலை செய்யப்படுகிறார்.

சும்மா இருக்குமா ''பச்சை மட்டை''?

குமரியில் நடந்த கொலைக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத தோழர் மகிழ்வரசனை 22-01-98 சனவரி காலை 10 மணி அளவில் மாடசாமி தலைமையில் அந்தச் சிற்றூர் போலீஸ் துணையுடன் வள்ளியூர் தோழர் அருள் வீட்டிலிருந்து கடத்திச் சென்றனர்.

''இந்த இயக்கம் இதெல்லாம் சொல்லி வேலை செய்யாதிங்கன்னு எத்தனை தடவ சொல்லறதடா. உன்ன, பிடிச்சா யாரு தொலைவரி (?) பெட்டிசன் போடறது..? தமிழகம் முழுக்க யார் யாருடா அமைப்பில் இருக்கிறது..?''

– என்று மகிழ்வரசனைக் கேட்ட மாடசாமியும்–போலிசு கும்பலும் கடுமையாக அடித்து சித்திரவதை செய்த பின்பு அஞ்சு கிராமம் போலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இதற்கிடையே தோழர் மகிழ்வரசன் போலீசாரால் கடத்தப்பட்டு 24–ஆம் நாள் வரை விடுவிக்கப்படாததால் கொதிப்புற்ற பொது மக்கள் குமரியில் பேருந்து ஒன்றை 24 ஆம் நாள் அன்று சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் வெறி கொண்ட போலீஸ் கும்பல் தன்னுடைய கையாலாகத்தனத்தை வள்ளியூரில் உள்ள தோழர் அருள்



படிப்பகம்

www.padippakam.com

**இந்த மூர்க்கத்தனமான ஒடுக்குமுறையால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கான அரசியலையோ விடுதலை இயக்கத்தையோ சிதைத்துவிடமுடியும் எனக் கனவு காண்கிறது இந்தப் போலீஸ் கும்பல்.**

குடும்பத்தாரிடம் காட்டியது. அவர் வீட்டில் குண்டுகள் இருக்கின்றனவா என்று தேடுகிறோம் என்பதாக 50க்கும் மேற்பட்ட போலிஸ் கும்பல் கிணற்றிலுள்ள நீரையெல்லாம் இறைத்து சோதனை போட்டு ஒன்றும் கிடைக்காததால் எரிச்சலுற்று அருகிலிருந்த த.ஒ.வி.இ. அலுவலகத்தைச் சூறையாடியது.

பின்னர், தோழர் அருள் அவர்களின் தம்பி சுந்தரை மாலை 5.30 மணிக்கு வலுக்கட்டாயமாக அடித்து உதைத்து கடத்திச் சென்றது.

இதற்கிடையே இது தொடர்பாக போலீஸ் கும்பலின் வெறியாட்டத்தைக் கண்டித்து மனித உரிமை அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகளுக்கு த் தொலைவரி-செய்திகள் கொடுத்த பின் வேறு வழியில்லாமல் 5 நாட்கள் கழித்து தோழர் மகிழ்வரசன் மீது பேருந்து உடைப்பு வழக்கைப் பதிவு செய்து 26 அன்று வழக்கு மன்றத்தில் ஒப்படைத்தது. மேலும் தோழர்கள் இராசரத்தினம், பெருமாள் மீதும் இதே வழக்கைப் பதிவு செய்துள்ளது.

ஆக, இந்த மூர்க்கத்தனமான ஒடுக்குமுறையால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அரசியலையோ விடுதலை இயக்கத்தையோ சிதைத்துவிட முடியும் எனக் கனவு காண்கிறது இந்தப் போலீஸ் கும்பல்.

மக்கள் போராட்டத்தில் சமரசமில்லாமல் உறுதியுடன் களத்தில் நிற்கும் நாம் பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் என்று பலவாறான முத்திரை குத்தி நம்மை ஒடுக்குகிறது இந்த போலீஸ்.

மக்களுக்காக மக்களுடன் ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடுகிறவன் தீவிரவாதியாம், கள்ளச்சாராயம் விற்பவனுடனும், கூட்டிக் கொடுப்பவனுடனும், கொள்ளையடிப்பவனுடனும், கொலை செய்பவனுடனும் ஐக்கியப்பட்டு கை கோர்த்துத் திரிபவன் மக்கள் தொண்டனாம்!

மேலதிகாரிகளின் ''கழிவறைத்தாளாக'' மட்டுமே பயன்படும் அடிமைகளே? போயஸ் தோட்டத்துக்கும், கோபாலபுரத்துக்கும் அடிமை ஊழியம் செய்யும் கோழைகளே!

ஆடுங்கள்! வெறி பிடித்து ஆடுங்கள்! நன்றாக ஆடிக் கொள்ளுங்கள் அறியாமைக்குள் மூங்கியிருக்கும் இம்மக்கள் எப்போதும் அடிமைகளாக இருக்கப் போவதில்லை.

அடிமைத் தளைகள் உடைபடும். உங்களின் ஆட்டம் முடிக்கும் போர் வரும்.

## தோழர் மாறனின் தாயார் மறைவு.

*இந்திய அமைதிப் படை - என்கிற பெயரில் தமிழீழத்திற்குச் சென்ற இந்திய வெறிப் படையின் ஆட்டங்களை நியாயப்படுத்திப் பொய்ப்பிரச்சாரம் செய்தன தொலைக்காட்சியும்,. வானொலியும்.*

*அப்பொய்ப் பரப்பல்களைக் கண்டிக்கும் வகையில் நடைபெற்ற கொடைக்கானல் தொலைக்காட்சி நிலைய குண்டு வெடிப்பு நிகழ்ச்சில் வீர மரணம் அடைந்தவர் தான் தோழர் மாறன்.*

*அவரின் தாயார் திருவாட்டி பாளையம்மாள் அவர்கள் கடந்த 11-02-97 அன்று நோய்வாய்ப்பட்டிருந்து மறைவுற்றார்.*

*தோழர்கள் அனைவரையும் பேணும் அந் நல்லுள்ளம் அமைவுற்றது மிகுந்த வருத்தத்திற்குரியது.*

*அவரின் குடும்பத்தார்க்கும் பிறர்க்கும் 'மக்கள் தமிழகம்' தம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.*



படிப்பகம்

www.padippakam.com

# 26 பேருக்குத் தூக்கு

## பன்னாட்டு மனித உரிமைக் கழகம் கண்டனம்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும், தனி வழக்கு மன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளதற்கு மனித உரிமைக் கழகம் (Amnesty International) கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதன் அறிக்கை சாரம்:

இந்த வழக்கு விசாரணை நேர்மையாக நடக்கவில்லை. பன்னாட்டு நெறிமுறைகளும் பின்பற்றப்படவில்லை. 'தடா' சட்டமே பன்னாட்டு நெறிமுறைகளுக்கு எதிரானது. விசாரணை கமுக்கமாக நடத்தப்பட்டதும், சாட்சியம் கமுக்கமாக வைக்கப்பட்டதும் நெறிமுறைகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள், 1991 சூலையில் கைது செய்யப்பட்டாலும், குற்ற அறிக்கை 1992 மே மாதத்தில் தான் தரப்பட்டிருக்கிறது. 1993ல் மே மாதம் வரை முழுமையான விசாரணை கூட தொடங்கப்படவில்லை. கடைசியாக 1994-சனவரியில்தான் விசாரணையே தொடங்கியது. தடாச் சட்டத்தின்படி-குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல் முறையீட்டுக்கு உயர் வழக்குமன்றம் போக முடியாது. உச்சநடுவர்மன்றம் தான் போக முடியும். இவை எல்லாமுமே கவலைதரக்கூடியவைகளாகும். அதோடு, கைது செய்யப்பட்டபோது ஆதிரை என்ற பெண்ணுக்கு அகவை 17 தான். 18 அகவைக்குட்பட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று பன்னாட்டுக் குழந்தைகள் உரிமைக்காப்பு ஒப்பந்தத்தின் 37(a) நெறி கூறுகிறது. ICCPR சட்டத்தின் 6(5) நெறியும் இதைத் தான் கூறுகிறது.

1997ல் உருவான ஐநா. மனித உரிமைக் குழுவின் தீர்மானமும் தூக்குத் தண்டனையை எதிர்க்கிறது.

அதோடு தூக்குத் தண்டனையை இன்னும் அமுல்படுத்தி வரும் நாடுகள், அதை கைவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இந்திய அரசியல் சட்டம் வாழ்வுரிமையை வலியுறுத்துகிறது. உச்ச வழக்கு மன்றமும் - தூக்குத் தண்டனையை மிகமிக அரிதாகவே பயன்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் ஆண்டுக்கு பன்னிரண்டு துக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்படி தூக்கிலிடப் படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், படிப்பறிவு இல்லாதவர்கள் தான். எனவே இந்த 26 பேருக்கும் தூக்குத் தண்டனை தரப்பட்டதை எதிர்த்துத் தொலைவரி, கடிதங்களை அனுப்புங்கள்.

வழக்கு விசாரணைகள் பன்னாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு ந டக்கவில்லை என்பதையும் தீர்ப்பு ஐநா. மனித உரிமைக் குழுவின் தீர்மானத்துக்கு எதிரானது என்பதையும் உச்ச நடுவர் மன்றம் கவனத்தில் கொள்ள தலைமை நடுவருக்கும் பிறருக்கும் தொலைவரிகளும், கடிதங்களும் குவிய வேண்டும்.

முகவரி :

**திரு. கே.ஆர். நாராயணன்**
இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவர்
அலுவலகம், ராஷ்டிரபதி பவன், புது தில்லி - 110 004.
Telegrams: President, New Delhi, India.

**Justice M.M. Punchi,**
Chief Justice of India, Supreme Court of India, Tilak Marg,
New Delhi 110 001. India.
Telegrams: Chief Justice, New Delhi,

தொலைவரிகள், கடிதங்களின் பிடிகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்
**Mr. Indirajit Gupta**
Minister of Home Affairs, Ministry of Home Affairs, North Block, New Delhi-110 001.



படிப்பகம்

www.padippakam.com



# சிலுவையும் தூக்கும்

குருதி வெறிபிடித்த ரோமபுரி ஆட்சியர்கள் அந்நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தினர். அதை எதிர்த்துக் கிளம்பிய போராட்டக்காரர்களெல்லாம் மனித நேயமே இல்லாமல் கொல்லப்பட்டனர். அப்படிக் கொலை செய்யப்படும்பொழுது அந்த ஆட்சியர்கள் இப்படிச் சொன்னார்கள்: ''ஆட்சிக்கு எதிராகப் போராட நினைக்கிறவர்களுக்கு இந்தத் தண்டனை அச்சத்தைக் கொடுக்க வேண்டும் எனவேதான் இவ்வளவு கொடூரமான தண்டனை'' என்று.

அண்மையில் மொழியாக்கம் செய்யப்பெற்று வெளிவந்த *ஸ்பார்டகஸ்-* வரலாற்றுப்புதினத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள இந்தப்பகுதி - நமக்கு ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக அண்மையில் நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பையே நினைவூட்டியது இந்தத் தண்டனை இதுமேலும் செயல்படுகிறவர் குரல் அன்றைய குருதி வெறி ஆட்சியரின் குரலிலிருந்து எந்த வகையிலும் வேறுபடவில்லை.

''இன்றைய சுரண்டல் அரக்கர்கள் அன்றைய ரோமபுரி அரக்கர்கள் போல் இல்லாமலிருக்கலாம் என்றாலும் அரக்கர்கள் வேறானாலும் அரக்கத்தன்மை ஒன்றேதான் !''

ரோமபுரி - கேப்புவா சாலை மீண்டும் போக்கு வரத்துக்குத் திறந்து விடப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. மாதத்தில் கையசு கிராசசும், அவன் தங்கை எலீனாவும், அவள் தோழி கிளாடியாவும் ஒரு வாரம் சுற்றத்தாருடன் தங்கி வருவதற்காகக் 'கேப்புவா'வுக்குப் புறப்பட்டனர். வழியிலே நிகழப்போகும் அற்புத சாகசங்களைக் கற்பனை செய்துகொண்டே மிகுந்த மகிழ்வுடன் ஒரு காலை வேளையில் ரோமிலிருந்து அவர்கள் புறப்பட்டனர். கையசு கிராசசு இருபத்தைந்து வயது இளைஞன். கருத்த சுருட்டை முடி, கவர்ச்சிகரமான முகம். உயர் குடியைச் சேர்ந்தவனாகவும் அழகனாகவும் சிறப்பு பெற்றவன்.

கடந்த பிறந்தநாளன்று தந்தை பரிசளித்த வெள்ளை குதிரையில் ஏறி அவனும், பல்லக்கில் பெண்களும் புறப்பட்டனர். தொடர்ந்து பத்துமைல் தூரம் பல்லக்குகளைச் சுமந்து ஓடக் கூடிய நான்கு அடிமைகள் பல்லக்கை சுமந்து வருகின்றனர்.

ஐந்து நாள் பயணத்தில் மாலை வேளையில் யாரேனும் ஒரு உறவினர் அல்லது நண்பர் வீட்டில் தங்கியிருந்து மீண்டும் பயணம் தொடருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டனர். வழி நெடுகிலும் **'தண்டனைச் சின்னங்கள்'** எதிர்ப்படுமென்று அவர்களுக்கு முன்பே தெரிந்திருந்தாலும் அவை தம்மை மனம் கலங்கச் செய்யும் என்று நினைக்கவில்லை.

உண்மையில் அவ்விளம் பெண்கள் இருவரும் சிலுவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு உணர்ச்சி வசப்பட்டனர். ஆனால் கையசுக்கு இப்படிப்பட்ட செய்திகளென்றால் முதலிலிருந்தே மிக விருப்பமானவை. அவை ஒரு விதமான பகைமை உணர்வைத் திருப்திப்படுத்துபவை. அந்தக் காட்சிகள் தன்னை ஒன்றும் செய்ய முடியாதென்கிற தைரியம் அவனுக்கு.

"சிலுவையேறுவதை விட, அதைப் பார்ப்பது நன்றாயிருக்கும்." என்றான் அப்பெண்களிடம்.



படிப்பகம்

www.padippakam.com

"முதலில் நம் பயணத்தை நல்லபடியாக முடிப்போம்" என்றாள் அவன் தங்கை எலினா.

ரோம் நகரைக் கடந்து சில மைல் தொலைவிலேயே தண்டனைச் சின்னங்கள் தென்படத் தொடங்கிவிட்டன. சற்று தொலைவுவரை கற்களும் மணலும் நிறைந்த வறண்ட நிலம் இருந்தது. அதன் குறுக்கே அப்பாதை செல்லும் ஆரம்பத்தில் ஒரு சிலுவை நடப்பட்டிருந்தது. தண்டனைச் சின்னக் காட்சிப் பிரிவின் அதிகாரி யாரோ தெரியவில்லை. என்றாலும், அவன் காண்போர் திடுக்கிடும் வகையில் சிறப்பாக அந்தக் குறிப்பிட்ட இடத்தில் சிலுவையை நடச்செய்திருக்கிறான். அது புதிய தேக்கு மரத்தை அறுத்துச் செய்யப்பட்டது. சிலுவையின் பின்புறம் பள்ளமாக இருந்ததால், மாசுமருவற்ற வானத்தின் கீழே அது வெட்ட வெளியில் மொட்டையாய் நின்று வருவோர் போவோரைக் கவர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அதில் தொங்கிக் கொண்டிருந்த மனிதன் மட்டும் நமக்கு உடனே தென்படமாட்டான். மற்ற சிலுவைகள் போலவே அதுவும் சற்று முன்னுக்கு சாய்ந்திருந்தது.

**ஆனால் அதில் தொங்கிக் கொண்டிருந்த மனிதன் மட்டும் நமக்கு உடனே தென்படமாட்டான். மற்ற சிலுவைகள் போலவே அதுவும் சற்று முன்னுக்கு சாய்ந்திருந்தது.**

கையசு தன் குதிரையை சிலுவையை நோக்கி செலுத்தினான். எலினாவும் தன் அண்ணனைப் பின்தொடருமாறு பல்லக்கு சுமக்கும் அடிமை களுக்குச் சைகை காட்டினாள்.

அந்தச் சிலுவையின் எதிரிலே அவர்கள் நின்றபோது பல்லக்குச் சுமக்கும் அடிமை யொருவன், "தாயே ! தாயே நாங்க கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாமா?" - என்று எலினாவிடம் பணிவாகக் கேட்டான். அவன் ஸ்பெயின் நாட்டவனாதலால் அரைகுறை இலத்தீன் மொழியில் கேட்டான்.

"எடுத்துக்கொள்ளுங்கள்!" என்றாள் எலினா

அவளுக்கும் தன் குடும்பப் பெண்களைப் போலவே சில திட்டவட்டமானக் கருத்துகள் உள்ளன. விலங்குகளையோ, அடிமைகளையோ, வளர்ப்பு விலங்குகளையோ கருணையில்லாமல் நடத்துவதை அவள் வெறுத்தாள்.

அடிமைகள் பல்லக்கைக் கீழிறக்கிப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டனர். சிலுவைக்குச் சற்று தள்ளி பந்தலின் கீழே பிரம்பு நாற்காலி ஒன்றில் நல்லவராகத் தென்பட்டுக் கொண்டிருந்த பருமனான ஆள் அமர்ந்திருந்தார். அவரிடம் பெரிய மனிதத்தன்மையும், ஏழ்மையும் ஒருங்கே தெரிந்தன. பெரிய தொந்தியும், அடர்ந்த தாடியும் அவரது முக்கியத்துவத்தை அறிவித்துக் கொண்டிருக்க, அழுக்கான ஆடைகளும் வளர்ந்த நகங்களும் அவருடைய வறுமையை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. அரசியலையே தொழிலாகக் கொண்ட அரசியல்வாதிகள் தங்கள் முகத்தில் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும் புன்சிரிப்பை அவரும் உதிர்த்துக் கொண்டிருந்தார். அதனால்தான் கண்டதுமே அவர் நட்புக்கு ஏற்றவர் போல் காணப்பட்டார்.

"உங்களைப் பார்த்ததும் எழுந்திருக்காமல் இப்படியே உட்கார்ந்திருக்கிறதுக்கு நீங்க என்னை மன்னிக்கனும். ஆனால் நெஞ்சிருக்கே நெஞ்சு..." எனச் சொல்லி தன் தொந்தியின் மீது கையை வைத்துக் காண்பித்தார். அவருடைய நெஞ்சு அங்கேதான் இருப்பதைப்போல்.

"நீங்க ரொம்ப முன்னதாகவே புறப்பட்டிருக்கீங்க, பயணங்களுக்கெல்லாம் அப்படித்தான் புறப்படணும்! கேப்புவா-வுக்குத்தானே?"

"ஆமாம்" என்றான் கையசு.

"வெளியூரிலிருந்து இங்கே வர்றவங்களுக்கு எல்லாம் காட்டி விளக்கிச் சொல்றேன். கதைகளும் சொல்லி மகிழ்ச்சிப்ப டுத்துவேன். சின்ன சின்ன சண்டை சச்சரவுகளை விசாரித்துத் தீர்ப்பும் சொல்றேன். நீதிபதியும் இதைவிட என்ன சொல்லிடறார்? உங்களிடம் சொல்லிக்க நான் ஏன் வெட்கப்படணும்?

பிச்சை எடுப்பதைக் காட்டிலும் உங்களைப் போன்றவங்களுக்கு ஏதாவது உதவி செய்து, சில்லரைக்காகச் சம்பாதித்துக் கொள்வது தேவலை இல்லையா?" என்று அந்த பருமனான ஆசாமி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த பிணத்தை இளம்பெண்கள் இருவரும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். அது அவர்கள் கண்முன்னே அருகாமையில் இருந்தது. பறவைகள் குதறிய அந்தப் பிணம் கருத்துப்போய் நிர்வாணமாகக் காட்சியளித்தது. காக்கைக் கூட்டமொன்று அதைக் கொத்த அடிக்கடி வந்து கொண்டிருந்தது. சிலுவையில் அந்தப் பிணம் முன்னுக்கு சாய்ந்திருப்பதைப் பார்த்தால் அது கீழே விழத் துடிப்பதைப் போலிருந்தது. மரணம் அதிலே அசைவை உண்டாக்குவது போலிருந்தது. அந்த


படிப்பகம்

www.padippakam.com

மனிதனின் தலை முன்னுக்குச் சாய்ந்து விட்டிருந்தது. அவன் முகம் எப்படி இருக்குமோ தெரியவில்லை. முகத்தை அவனது நீண்ட முடி மறைத்து விட்டிருந்தது.

கையசு, தொந்திப் பேர்வழிக்கு ஒரு நாணயம் தந்தான். அவனும் அந்தளவுக்கே நன்றி தெரிவித்தான். பல்லக்குச் சுமப்போர் பேசாமல் அமர்ந்திருந்தனர். அவர்கள் சிலுவையை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களுக்கு அளித்திருந்த பயிற்சி அப்படி! அதனால்தான் அந்த மவுனமும், அலட்சியமும்!

"சொல்லப் போனா இந்தச் சிலுவை ஒரு அடையாளம் மட்டுமே! இதைக் கொடுமையான துண்ணோ, பயங்கரமான துண்ணோ நினைக்கா தீங்கம்மா! ரோமாபுரி கொடுக்குது; திரும்பி பெற்றுக் கொள்ளுது. அதுவுமில்லாம இந்தத் தண்டனை அவனோட குத்தத்துக்குச் சரியானதே! இவன் கேப்புவா வரை உங்க கவனத்தை ஈர்க்கமாட்டான். ஏன்னா, வழிநெடுக இப்படிப் பட்ட சிலுவைங்க எத்தனையோ!" என்றார் பருமனான ஆள்.

> "ஆறாயிரத்து நானூத்தி எழுவத்தி ரெண்டு" என்று குண்டுப் பேர்வழி மீண்டும் கூறினார்.....
>
> "அது ஒரு அடையாளம் மட்டுமே சொல்லப்போனா ஒரு அடையாளத்தின் அடையாளம் மட்டுமே!"

அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருந்தாலும் அவரே நிச்சயம் கூறுவாரென்று சும்மாயிருந்தனர். அவர் எதைப்பற்றிக் கூறினாலும் கனகச்சிதமாகக் கூறினார். கொடுமைகளையும், பயங்கரச் செயல்களையும் கூட வெகு இயல்பாக விளக்கினார். அவர் ஒரு புள்ளி விவரம் தெரிவித்தார். அது சரியோ தவறோ ஆனால் கச்சிதமாகக் கூறிவிட்டார்.

"ஆறாயிரத்து நானூத்தி எழுவத்தி ரெண்டு"

பல்லக்கு சுமக்கும் அடிமைகளில் சிலர் அசைந்தனர். அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கவில்லை; மரத்துப் போய் உட்கார்ந்து இருந்தனர். அவர்களை உற்றுப் பார்த்தால் யாரும் இதை உணரமுடியும். ஆனால் அவர்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பவர்கள் யார்?

"ஆறாயிரத்து நானூத்தி எழுவத்தி ரெண்டு" என்று குண்டுப்பேர் வழி மீண்டும் கூறினார்.

"எல்லாமும் சேர்ந்தா?" அலட்சியமாகக் கேட்டான் கையசு.

"எலீ! அது பொய்யிண்ணு எனக்குத் தெரியும்" என்றும் சொன்னான். அந்தக் கோமாளி மட்டும் இதை ஒன்றும் பொருட்படுத்தாமல் ஒரு சிறிய பிரம்பால் சிலுவையைச் சுட்டிக்காட்டியவாறு கூறிக்கொண்டிருந்தான்.

"அது ஒரு அடையாளம் மட்டுமே! சொல்லப் போனா ஒரு அடையாளத்தின் அடையாளம் மட்டுமே!"

கிளாடியா புன்முறுவல் பூத்தாள்.

"அதைத் தெரிஞ்சுக்க வேண்டுமென்கிற ஆவல் பிறக்குது. அதுக்கு முக்கியத்துவமும் இருக்கு பகுத்தறிவை எடுத்து பக்கத்துலே வையுங்க! பகுத்தறிவே ரோமாபுரி! ரோமாபுரியே பகுத்தறிவு!" அவருக்கு பழமொழிகள் என்றால் மிகவும் விருப்பம்.

"அவன்தானா ஸ்பார்ட்டகஸ்?" என கிளாடியா திடீரென்று கேட்டாள். அவ்வளவு முதுமையிலும் அவர்தன் உணர்ச்சியை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. தன் உதடுகளை இறுக்கிக் கொண்டார். அதனால் தான் கையசு அட! கிழட்டு மாடே! என்று மனசுக்குள்ளேயே கறுவிக் கொண்டான்.

"ஸ்பார்ட்டகஸ் இல்லையம்மா!"

"அவனோட பிணம் கிடைக்கல்லே!" என்றான் கையசு பொறுமை இழந்து. "கண்டதுண்டமா வெட்டி எறிஞ்சுட்டாங்கம்மா! உங்க உள்ளமோ மென்மையானது நடந்தவையோ பயங்கரமானவை. ஆனாலும் உண்மை அது!".

அதிருக்கட்டும். உங்கள நான் ஒண்ணு கேக்கறேன். தண்டனைக்கு அடையாளம்னா அதுக்கு ஆறாயிரத்து நானூத்தி எழுவத்திரெண்டு எதுக்கு?"

"அந்த நாய்களுக்கு அதுதான் தகுந்த தண்டனை!" என்றான் எலினா நிதானமாக.

"ஆனா அவங்க பின்வாங்குவாங்களா?" குதர்க்கம் செய்பவனைப் போல் தலையை உயர்த்தினான். அவன் உலகஅனுபவம் பெற்றவன். இது நன்கு தெளிவாயிற்று. அவர்கள் சமூக அளவில் அவனைவிட உயர்ந்த நிலையில் இருக்கலாம். என்றாலும் நான் சொல்வதைச் செவிமடுப்பீர் இளம்பிள்ளைகளே, கையில் வைத்திருந்த கம்பால் சுட்டிக்காட்டி கூறினான்: "இங்கிருக்கானே இவன், பார்க்க லட்சணமாகவே இருப்பான். "கால்"பிரிவைச் சேர்ந்தவன் ஃபயர்சுடிராக்சு என்ற



படிப்பகம்

www.padippakam.com

இவன் ஸ்பார்ட்டகசுக்கு மிக நெருங்கியவன். இவன் சாகும் போது நான் பார்த்தேன். இவன் செத்துத் தொலைக்க நாலு நாள் பிடிச்சதுன்னா பாருங்களேன்! எருமை மாட்டு வலிமை கொண்டவன். அவன் எவ்வளவு வலுபடைச்சவன்னு சொன்னா நீங்க நம்பமாட்டீங்க, இவன் பலத்திலே கொள்ளி வைக்க!

.... ஸ்பார்ட்டகசை அடையாளமே தெரியாம கண்ட துண்டமா வெட்டி எறிஞ்சிட்டாங்களே! இவனை அப்படி செய்யலையே! ஏதோ ஒண்ணு ரெண்டு கத்திக்குத்து விழுந்திருக்கு. அவ்வளவுதான்!"

அந்தப்பிணத்தின் விலாவில் பட்டிருந்த நீண்ட காயத்தைக் கம்பால் சுட்டிக் காட்டினான் அவன்.

"இந்தக் கத்திக்குத்துகள் எல்லாம் கூட முன்புறமும், பக்கவாட்டிலும் மட்டுமே இருக்கு. ஆனா ஒண்ணுகூட முதுகிலே இல்லை. இதுவெல்லாம் உங்களுக்கு பெரிய செய்தியாகத் தோணா விட்டாலும், உண்மையை சொல்லணும்னா.."

பல்லக்கை சுமந்து வந்தவர்கள் இப்போது அவனை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டே அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் கண்கள் கரிய முடியின் பின்னால் மின்னின.

"...இவங்களே இத்தாலிப் பகுதியில் இருந்த வலிமை கொண்ட படை வீரர்கள். இனி நாம் இவனோட செய்திக்கு வருவோம். இவன் சாவதற்கு நாலு நாள் பிடிச்சது. அப்பவும் இவனோட ஒரு நரம்பை அறுத்து குருதியை வெளியே பீய்ச்சிய பிறகே செத்தான். இல்லாட்டா இன்னும் எத்தனை நாள் உயிரோட இருந் திருப்பானோ என்னவோ! இவங்க உடம்பிலே இருந்து ரத்தத்தை உறிஞ்சாவிட்டா வீங்கிப் போவாங்க. ஆனா உயிர் போகாது. அதனாலே கவனமா ரத்தத்தை வெளியேத்திட்டா, நல்லா உலர்ந்துபோய் சில நாள்லே செத்துடுவாங்க. கறித்துண்டுகளை நாம வெயிலிலே உலர்த்து வதில்லையா? அதுபோல! இவனும் லேசுப்பட்டவனில்லை. பயங்கரவாதி. அலட்சியமும் கர்வமும் முகத்திலே அப்பியிருந்தது. இவனைச் சிலுவையிலே தொங்விட்ட முதல் நாள், தென்பட்டவர்களை எல்லாம் கண்டபடி திட்டித்தீர்த்தான். அந்த வசவுகளைப் பெண்கள் காதால் கேட்கமுடியாது. நானும் அவனைப் பார்த்து `நீ அதிர்ஷ்டக்கட்டை அதனால்தான் சிலுவையிலே அறைபட்டுக் கிடக்கிறே! நான் அதிர்ஷ்டசாலி. அதனால்தான் இங்கே நின்னுகிட்டிருக்கேன் என்றேன். என் பேச்சை அவன் ஒண்ணும் பொருட்படுத்தலே. மறுநாள் சாயங்காலம் விறைத்துப் போயிருந்தான். அவனோட கடைசிப் பேச்சு என்னான்னு உங்களுக்கு தெரியுமா"

"என்ன?" என்று முனகினாள் கிளாடியா.

**"நான் மீண்டும் வருவேன் லட்சோப லட்சமாகி வருவேன்'**- வேடிக்கையா இல்லையா இது?"

"அவனோட நோக்கம் என்னான்னே புரியலியே!" என்று குழம்பினான் கையசு. உண்மையாகவே அவனை இந்தப் பருமனான ஆசாமி வசியப்படுத்திவிட்டான்.

"அவன் சொன்னதின் பொருள் என்னாங்க? உங்களை விட எனக்கென்ன அதிகமாகத் தெரியும்? பிறகு அவன் வாய் திறக்கவே இல்லை மறுநாள் அவனைக் கிள்ளியும் பார்த்தேன் அசையவே இல்லை. ஆனா சிவந்த கண்களாலே என்னை கொன்னுடறாப்போல பார்த்தான்."

அவன் கிளாடியாவை நோக்கி "பார்த் தாயில்லையா அம்மா? இவன் ஸ்பார்ட்டகஸ் இல்லை. அவனோட நெருங்கிய தோழன் உங்களுக்குப் பாதையிலே எங்குமே ஸ்பார்ட்டகஸ் பிணம் பார்க்கக் கிடைக்காது. இன்னும் நீங்க ஏதாவது தெரிந்து கொள்ளணுமா?" என்று கேட்டான்.

"தெரிஞ்சிக்க வேண்டியதெல்லாம் தெரிஞ்சு கிட்டதாகவே நினைக்கிறோம். இனி நாங்கள் புறப்படணும்" கூறினான் கையஸ்.

## செருப்புகளல்ல...

நீ!
சூட்டிய மாலையில்
தொங்கித் தெரிபவை
செருப்புகளல்ல.....

சாதி இறுகிய
ஊரின் முகத்தை
சேரிச் செருப்புகள்
தேய்த்ததால் வந்த வெறுப்பு.

உழைத்த உடல்கள்
கருத்த நெருப்பென
கொழுந்த உன் திமிரை
எரிப்பதால் வந்த கடுப்பு.

அடி தின்ற நெஞ்சத்தின்
இடியான உணர்வினில்
பொடியாகிச் சாகும் உன்
ஆதிக்க இறுதித் துடிப்பு.

புறம்போக்கு



படிப்பகம்

www.padippakam.com



# உடைக்கணும் இப்போதே!

புதைத்தும் உயிர் வாழும்
பிணவறை மனிதர்களை
உலக வரை படத்தில்
பார்த்த துண்டா?

ஒரு நாள்
எனக்கு முன்னால்
பிணவறை ஒன்று வந்தது.
காங்கிரீட் குழாய்களில்
கால், கை மூடி...
அடுக்கடுக்கான
மண்வரிசைக்குள்ளிருந்து
பேசிய குரலால்
அறிந்தேன் தமிழென்று.

''என்ன இது இப்படி
கல்லறையைச் சுமந்தபடி?''

''பிறக்கும் பொழுதே
இப்படித்தான்...''
என்றது நின்றது

''மசக்கையாய் இருக்கையில்
தின்ற மண்ணெல்லாம்
இடுகாட்டு மண்ணா?''
கேட்கத் தொடங்கினேன்

''இல்லை அந்த மண்
கருவறைக்குவராது.

பிணவறை மனிதன்
மனிசியைக் கூடினால்
தொட்டிலுக்கு மாறாகக்
கல்லறைதான் பிறக்கும்.
கருவறை என்றோ
காணாமற் போனது..''

மண் வரிசை ஒன்றை
முகத்திலிருந்து தட்டினேன்.
கையும் முகத்துடன்
ஒட்டிக் கொண்டது.

''வீண்முயற்சி எதற்கு
ஆண்டுகள் சில ஆயிரம்
மனுப் பசை சேர்த்துப்
படியவைத்த மண்..
பூணூல் போட்டவன்
எடுத்துப் பூசியது
எளிதில் பெயராது...
இதன்பெயர் சாதி...!''

தலையில் அப்பிய
மண்வரிசை ஒன்றைப்
பெயர்க்க முயன்றேன்
பின்னும் பேசியது..

''தலையிலிருப்பது
தலைக்குள்ளிருந்து
வளர்ந்த மண்ணின்
வரிசை....இதுவும்
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் வளர்ந்தது

எடுக்க முயலாதே
இதன் பெயர் மதம்..

கையை காலையும்
முடிக்கனப்பது
இந்தியக் காங்கிரீட்
என்றது மண்வாய்!''

முகத்தில் அப்பிய
மண்ணைப் பெயர்க்கவும்
மூளையிலிருந்து
முடிவரை வளர்ந்த
களிமண் வரிசையைக் கழுவவும்
கடைசியாய்....
பிணவறையை விட்டுக்
கருவறையில் பிறக்கவும்
கைக்கும் காலுக்கும்
விடுதலை வேண்டும்.

இரண்டையும் புதைப்பதை
உடைக்கணும்
இப்போதே!

– இன்குலாப்

'உழைக்கும் மக்கள் தமிழகம்', 183,வெங்கட்டரங்கம் தெரு, சென்னை – 600 005.

படிப்பகம்